இலக்கு
வாராந்த மின்னிதழ்
இதழ் : 38 ● 11.08.2019
அனைத்துலக தமிழ் ஊடக மையம்
GLOBAL TAMIL MEDIA CENTRE, USA ● ilakku2009@gmail.com



# தேசியத் தலைவரின் மண்ணில் தேர்தல் நாடகமாடாதீர்கள்

சுமந்திரனின் கருத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கண்டனம்

# எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்தாலும் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை



மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி அமலநாயகி இலக்கு மின்னிதழுக்கு பேட்டி

# பலம்பொருந்திய கூட்டு முன்னணி இல்லையேல் தமிழருக்கென்று ஒன்றுமில்லை

மு.திருநாவுக்கரசு

# பூகோள பிராந்தியப் போட்டியில் புதைந்துபோயுள்ள நாடுகளுக்கு தற்போது தமிழ் மக்களின் வாக்குகள் தேவை

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

# தமிழ் வாக்குகளை இலக்கு வைத்து கோத்தபாய நகர்த்தும் காய்கள்

பூமிகன்



# மொஸ்கோவில் வெடித்த போராட்டத்தில் 50 ஆயிரம் பேர் பங்கேற்பு

# தேசியத் தலைவரின் மண்ணில் தேர்தல் நாடகமாடாதீர்கள்

## சுமந்திரனின் கருத்துக்கு தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் கண்டனம்

தமிழ்த் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரனின் பிறந்த மண்ணில் வைத்து அவரையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் முன்னிலைப்படுத்தி தமிழ்த் தேசியத்தின் காவலனைப் போன்று



சுமந்திரன் உரையாற்றியதானது தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தினை கொச்சைப்படுத்திதமிழ் மக்களை ஏமாற்றும் செயலாகும். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சுமந்திரன் இத்தகைய போலித் தமிழ்த் தேசிய அரசியல் பேசி நாடகமாடக்கூடாது என்றும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து அவதானிப்பு மையம் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவதுஇ

வல்வெட்டித்துறையில்இ உலக சாதனை நீச்சல் வீரன் ஆழிக்குமரனின் நினைவாக அமைக்கப்பட்ட நீச்சல் தடாகம் வெள்ளிக்கிழமை அன்றுதிறந்து வைக்கப்பட்டது. நாடாளுன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது சகாவான அமைச்சர் மங்கள சமரவீரவின் பிரசன்னத்துடன் விழாநடைபெற்றபோது தனது விசேட அதிரடிப்படையினர் மற்றும் அமைச்சர்களுக்கான பாதுகாப்பு அதிகாரிகளின் மத்தியில் நின்று சுமந்திரன் உரையாற்றினார்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரனைப் போல மற்றுமொரு தலைவர், தமிழர்கள் மத்தியில் இருந்து உருவாகுவாரா இல்லையா என்பதை தென்னிலங்கை அரசியல் தலைவர்களே தீர்மானிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது உரையில் குறிப்பிட்டார்.

கொழும்பில் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டு மேட்டுக்குடி அந்தஸ்தைப் பெற்றதும் அவருக்கான அரசியல் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது, தமது இன்னு—யிர்களை தியாகம் செய்யவும் தயங்காது கொள்கையின் பற்றுறுதியுடன் தமிழ்த் தேசியக் கோட்பாட்டுக் கொள்கையுடன் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கையை தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறி நிராகரித்ததாகவும் விடுதலைப்புலிகள் ஆயுத ரீதியாக வலுவற்ற பின்னரே அரசியலில் ஈடுபட தயாராகி பிரவேசித்ததாகவும் பகிரங்கமாக கூறியவர் இந்த சுமந்திரன்.

போரின் இறுதியில் இலங்கை அரச படைகளால் இழைக்கப்பட்ட தமிழின அழிப்புக்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் அழுத்தமான பிரயோகங்கள் முன்னெடுப்பதற்கு பதிலாக ஐ.நா.மனித உரிமை ஆணையத்தின் விடயங்களை நானே கையாளுகின்றேன் என்று தமிழ்மக்களை மாயவார்த்தைகளால் ஏமாற்றி போரில் இருதரப்பினரும் குற்றங்களை புரிந்தனர் என்று அதாவது விடுதலைப் புலிகளும் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என்று கருத்துரைத்து இலங்கை அரச படைகளை பாதுகாப்பதில் தீவிரமாக காய்களை நகர்த்தியவர்தான் இந்த சுமந்திரன் என்பதை உலகத் தமிழர்கள் நன்கு அறிவார்கள்.

முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக வடக்கிலிருந்து அவர்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியபோதும் மூன்று தசாப்தங்களைஅண்மித்திருக்கும் நிலையில் விடுதலைப்புலிகளின் மீது தனக்கிருந்த தனிப்பட்ட எதிர்நிலை சிந்தனையால் விடுதலைப் புலிகள் தவறிழைத்து விட்டார்கள் என்றும் மேடைகள் தோறும் இடித்துரைத்தவர் இந்த சுமந்திரன் என்பதையும் தமிழர்கள் இலகுவில் மறந்துவிடமாட்டார்கள்

தமது உறவுகளை, எதிர்காலத்தினை என அனைத்தையுமே துறந்து போராட்டத்தில் ஈடுபட்டு தற்போதும் வடுக்களைச் சுமந்துகொண்டு சமூகத்தில் வாழ்வுக்காக போராடிக் கொண்டிருக்கும் முன்னாள் போராளிகளை அவர்களின் சொந்தங்களின் வாக்குகளைப் பெற்று பிரதிநிதித்துவத்தினை பெற்றவர் என்பதையும் மறந்து தனக்கு அவர்களால் அச்சுறுத்தல் என்று தென்னிலங்கையிடமும் சர்வதேசத்திடம் காட்டிக் கொடுத்தபோது சுமந்திரன் விடுதலைப்புலிகள் மீது எவ்வளவு தூரம் நெஞ்சில் விசத்தை தாங்கியிருந்தார் என்பதை உணரமுடிந்தது.

இணைந்த வடக்கு கிழக்கில் தாயகம், தேசியம், சுயநிர்யணம் என்ற தமிழ்த் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசியல் தீர்வே அவசியம் என்பதில் அனைத்து தரப்பினரும் உறுதியாக இருக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது கொண்ட பற்றின்பால் வார்த்தைஜாலம் காட்டி தமிழினத்தின் எதிர்காலத்தையே படுகுழியில் தள்ளியவர் வாயிலிருந்து பிரபாகரன் என்ற வாரத்தையை உச்சரிக்கவைக்கும் அளவிற்கு தேர்தல் அரசியல் அவரைக் கடுமையாக வாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தில் தாயக உறவுகளும் அவர்களுக்கான குரல்களும் சான்றாதாரங்களுடன்

**தொடர்ச்சி 9ம் பக்கம்**

---

## செப்ரெம்பர் 16 இல் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவதென நேற்று நடைபெற்ற பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் பொது அமைப்புகளின் பிரதி—நிதிகளுடனான சந்திப்பு நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் யாழ் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தமிழ் மக்கள் பேரவை
Tamil People's Council

ஐம்பதுக்கும் மேற்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் தமிழ் மக்கள் பேரவை யின் உறுப்பினர்களும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை நடத்துவது என முடிவெடுக்கப்பட்டதுடன் இதற்கென பொது அமைப்புகளின் பிரதி—நிதிகள் உள்ளடங்கிய ஏற்பாட்டுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. ஐ.நா பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் ஆரம்பமாக இருக்கின்ற நிலையில், ஈழத்தமிழ் மக்களின் அவலத்தையும் தமிழ் மக்களின் இருப்புக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தையும் வெளிப்படுத்துவதுடன் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழர் தாயகம் தழுவியதாக எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை யாழ்ப் பாணத்தில் நடத்துவதெனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை தமிழ் மக்களின் நலன் சார்ந்த இப் பேரணிக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் நேற்றைய கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

---

## தெரிவுக்குழு சனாதிபதிக்கு அழைப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் சம்பந்தமாக விசாரணை நடத்தும் விசேட பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ஆஜராகி சாட்சியமளிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைய எதிர்வரும் 20, 21, 22 ஆகிய திகதிகளில் வசதியான தினத்தில் சாட்சியமளிக்க வருமாறு சனாதிபதிக்கு தெரிவுக்குழு தெரியப்படுத்தியுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கத்தின் அமைச்சர்கள் பலர் மட்டுமல்லாது உயர் அரச அதிகாரிகளும் இந்த தெரிவுக்குழுவில் ஆஜராகி சாட்சியமளித் துள்ளனர்.

# வல்லரசுகள் எம்மை அழிக்கலாம்!

## கஜேந்திகுமார் பொன்னம்பலம் கருத்து



தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையில் செயற்படக்கூடிய முதுகெலும்புள்ள தலைமைகள் உருவாவதை பிராந்திய வல்லரசுகள் தடுத்து வருவதாக குற்றம்சாட்டியுள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திகுமார் பொன்னம்பலம் எதிர்வரும் தேர்தல்களில் வல்லரசு நாடுகளினால் தமது கட்சி தோற்கடிக்கப் படலாம் அல்லது அழிக்கப்படலாம் என்று தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். 'கடந்த பத்து வருடங்களாக இந்தியா போன்ற வல்லரசு நாடுகள் தங்களுடைய நிகழ்ச்சி நிரலுக்கு முகவர்களாக பயன்படுத்திய தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஆதரவை இழந்து வருகின்றது என்பதை குறித்த வல்லரசுகள் உணர்ந்துள்ளன.

எனவே தமிழ் மக்கள் மாற்றுத் தரப்பை உருவாக்க முனைகின்ற நிலையில் அந்த மாற்றுத் தரப்பும் தங்களுடைய முகவர்களாக இயங்கக் கூடிய தரப்பாக இருக்கும் வகையில், முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையில் அவர்களை ஒருங்கிணைக்க வல்லரசுகள் முயற்சிக்கின்றன. எவ்வாறாயினும், தமிழ் தேசிய முன்னணியை பொறுத்த வரையில் அனைத்து தரப்புகளும் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும். அதாவது தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மைகளையும் வழங்காமல் தமிழ் மக்களின் வாக்குகளை பெறமுடியாது. இனியும் தங்களுடைய தேவைகளுக்கு பயன்படுத்தி விட்டு வீசும் கருவேப்பிலைகளாக தமிழ் மக்களை பயன்படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# யாழ் பல்கலை மாணவர்கள் பேரணியில் அணிதிரள்வர்

**மாணவர் ஒன்றியச் செயலாளர்**



தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப்பேரணிக்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

சரியான நேரத்தில் தமிழ் மக்கள் பேரவை பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் நடத்துகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது பரிபூரணமான ஆதரவை வழங்கும் என்பதுடன் பேரணியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முழுமையாக கலந்து கொள்வர்.

இவ்வாறு நேற்று நடைபெற்ற பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பவிலராஜ் தெரிவித்தார்.

# வேட்பாளர்கள் கொள்கைகளை அறிவித்தபின் கூட்டமைப்பு தனது முடிவை வெளிப்படுத்தும்!

## சுமந்திரன்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரை நாடு கடத்துமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையைக் கனேடிய அரசு நிராகரித்துள்ளதாக சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர் எனப் புலிகளினால் பிரசாரம் செய்யப்பட்ட 400 பேர் கனடாவின் ரொறன்டோவில் வாழ்ந்து வருகின்றனர் எனவும், பத்து ஆண்டுகளின் பின்னர் இந்தத் தகவல்கள் அம்பலமாகியுள்ளன எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்த நபர்களின் ஆள் அடையா ளத்தை வெளிப்படுத்துவதைக் கனேடிய அரசு மறுத்துள்ளது. வவுனியா மேல் நீதிமன்றினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச தொடர்புப் பிரிவின் பொறுப்பாளர் சுதர்சன் என்பவர் ரொறன்டோவில் வாழ்ந்து வருகிறார் எனவும் அவரை நாடு கடத்துமாறு இலங்கை அரசு விடுத்த கோரிக்கையை கனேடிய அரசு நிராகரித்துள்ளதாகவும் திவயின செய்தி வெளியிட்டுள்ளது

நியூ ரொறன்டோ என்னும் கனேடியப் பத்திரிகைக்கு சிமோனாபிள்ளை என்னும் பெண் ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் இந்த நபர்கள் இலங்கையிலிருந்து கனடாவுக்கு தப்பிச் சென்றமை உறுதியாகியுள்ளது எனவும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இராணுவப் பதவி உயர்வுகள்

சிறிலங்காவின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிரடியாக மற்றொரு நடவடிக்கையை கடந்த வாரம் மேற்கொண்டார். சரத் பொன்சேகாவுக்கு புகழாரம் சூட்டும் விதத்தில் அவருக்கு வழங்கப்பட்ட ஐந்து நட்சத்திர ஜெனரல் அந்தஸ்தை வேறு இரண்டு படைத் தரப்பு அதிகாரிகளுக்கு அவர் புதிதாக வழங்கியிருக்கின்றார். பொன்சேகா ஐ.தே.க. தரப்பில் இருப்பதால், அதேபோன்ற ஒரு இராணுவ அதிகாரிகளின் பலம் மற்றப்பக்கத்திலும் இருக்க வேண்டும் என்பதற்காக மைத்திரி எடுத்த அதிரடி முடிவுதான் இது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை முடிவுக்குக் கொண்டு வந்தபோது கடற்படைத் தளபதியாக இருந்த வசந்த கரன்னகொடவுக்கும், சிறிலங்கா விமானப் படைத் தளபதியாக இருந்த றொஷான் குணதிலகவுக்கும் இந்தப் பட்டங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பொன்சேகாவுக்கு இணையாக கரன்னகொடவுக்கு "அட்மிரல் ஒவ் த பிலீட்" தரமும் றொஷான் குணதிலகவுக்கு "மார்ஷல் ஒவ் எயார் போர்ஸ்" தரமும் வழங்கப்பட்டுள்ளன. இவை பொன்சேகாவின் ஐந்து நட்சத்திர ஜெனரல் தரத்துக்கு ஒப்பானவையாகும்.

சிறிலங்காவில் இராணுவம் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவ வெற்றியை காட்டியே பத்து வருடமாக அரசியல் நடத்தப்படுகின்றது. 2010 இல் மகிந்தவுக்கு எதிராக பொன்சேகாவை ஐ.தே.க. பொது வேட்பாளராக களம் இறக்கியதே இந்தப் பின்னணியில்தான். அவர் தோற்கடிக்கப்பட்டார். சிங்கள மக்கள் மத்தியில் மகிந்தவே கதாநாயகனாக இருந்தார். 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் பொன்சேகா, பீல்ட் மார்ஷலாக தரமுயர்த்தப்பட்டதும் கூட, இராணுவத்தை நாம் போற்றுகிறோம் என்பதைக் காட்டுவதற்காகத்தான். இப்போது கோத்தாபய சனாதிபதித் தேர்தலில் களமிறக்கப்படுகின்றார். போர்க் காலத்தில் பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றியவர். சிங்கள மக்கள் மத்தியில் ஹீரோவாகப் பார்க்கப்படுபவர். அவருக்குப் போட்டியாக சிங்களக் கடும்போக்காளவர்களின் ஆதரவைப் பெறக் கூடிய ஒருவரையே களமிறக்க வேண்டும் என்ற கருத்து ஐ.தே.க. வட்டாரங்களில் காணப்படுகின்றது. அந்தப் பின்னணியில்தான் சஜித் பிரேமதாஸவின் பெயர் முன்வைக்கப்படுகின்றது. பொன்சேகாவின் பெயர் கூட பிரேரிக்கப்பட்டிருக்கின்றது.


எந்தப் பக்கம் செல்வது எனத் தெரியாமல் தத்தளித்துக்கொண்டிருந்த மைத்திரிபால, இப்போது மீண்டும் மகிந்த பக்கம் செல்வார் என்பது உறுதியாகியிருக்கின்றது. மகிந்தவையும், கோத்தாவையும் அவர் கடந்த வாரம் சந்தித்துப் பேசியிருக்கின்றார். இவ்வருடத்துடன் ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெறவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ள மைத்திரிக்கு கௌரவமான அந்தஸ்த்து ஒன்றை வழங்க ராஜபக்சக்கள் இணங்கியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அதற்குப் பிரதியுபகாரமாகத்தான் ராஜபக்சக்களுடன் உள்ள இரு படை அதிகாரிகளை பொன்சேகாவின் தரத்துக்கு இணையாக உயர்த்துவதற்கு அதிரடியாக மைத்திரி முடிவெடுத்தார். பதவி உயர்வு பெற்றுள்ள வசந்த கரன்னாகொட கடற்படைத்தளபதியாக இருந்த காலத்தில்தான் கொழும்பு மற்றும் சுற்றுப்புறத்தில் 2008ஆம் ஆண்டளவில் 5 மாணவர்கள் 11 தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் கடற்படையினரால் வெள்ளை வாகனங்களில் கடத்தப்பட்டு காணாமல் ஆக் கப்பட்டிருந்தனர். இவற்றுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர் கருணாகொடதான்.

2005ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை வசந்த கரன்னாகொட கடற்படை தளபதியாக இருந்தபோது அவருக்கு கீழ் இயங்கிய இரகசிய கடற்படைப்பிரிவு ஒன்று இவ்வாறான கடத்தல்கள் மற்றும் காணமல் ஆக்கப்பட்ட சம்பவங்களுடன் நேரடியாக தொடர்புபட்டிருந்ததாக சிறிலங்கா குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்திலும் அறிவித்திருந்தது. கொழும்பு துறைமுகப் பகுதியிலும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள ரகசிய சித்திரவதை முகாம்களில் கடத்தப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டு கடுமையான துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றங்களுக்காக கருணாகொட கைதாவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கைகளில் விலங்குகளை மாட்டுவதற்குப் பதிலாக, பதவி உயர்வுகளையும், கௌரவப் பட்டங்களையும் கொடுத்து மகிழ்ந்திருக்கிறார் மைத்திரி. ராஜபக்சக்களையும் மகிழ்வித்திருக்கின்றார். நீதியை எதிர்பார்த்த மக்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் இதன்மூலம் தெளிவான ஒரு செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு எதிரான கொடுமைகளைப் புரிந்த இராணுவ அதிகாரிகள், தண்டனைக்கு உள்ளாக்கப்படமாட்டார்கள். பதிலாக அவர்களுக்கு பதவி உயர்வுகள் மட்டுமே மட்டுமே வழங்கப்படும் என்பதுதான் அந்தச் செய்தி.

# சனாதிபதி வேட்பாளர்களிடம் எழுக தமிழின் ஆறு கோரிக்கைகளையும் வலியுறுத்துவோம்!

## தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் விக்னேஸ்வரன்



"சனாதிபதித் தேர்தலில் நிற்கப் போகும் வேட்பாளர்கள் எழுக தமிழ் பேரணியில் முன்வைக்கப்படும் ஆறு விடயங்களையும் இலகுவாக அனுமதிக்க முடியும். அவற்றைச் செய்யுமாறு நாம் அரசை, அரசாங்கத்தை, சனாதிபதி வேட்பாளர்களை வேண்டுவது நியாயமானது. எனவே இவற்றை இம்முறை வலியுறுத்துவோம்" என தமிழ் மக்கள் பேரவையின் எழுக தமிழ் குறித்த விசேட கூட்டம் யாழ் நூலக கருத்தரங்க மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற போது இணைத்தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அழைப்பு விடுத்தார்.

30 வரையிலான பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டிருந்தனர். இங்கு உரையாற்றிய விக்னேஸ்வரன் மேலும் முக்கியமாகத் தெரிவித்ததாவது:

"எழுக தமிழ்" எழுச்சிப் பேரணியை நடத்துவது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள அறிவிப்பு பல்வேறு மட்டங்களிலும் பெரும் வரவேற்பை பெற்றிருப்பதாக உணர்கின்றேன். தற்போதைய சூழ்நிலையில் இத்தகைய ஒரு நிகழ்வை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியமானது என்றும் அவசரமானது என்றும் இந்த அறிவிப்பு குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பதாகவும் பல்கலைக்கழக சமூகம் முதல் தொழிலாளர் அமைப்புக்கள் வரை எம்மிடம் நேரடியாகத் தெரிவித்திருக்கின்றார்கள்.

வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆந் திகதி எமது இந்த நிகழ்வை நடத்துவதற்கு ஒரு மாதத்துக்கும் குறைவான காலமே இருக்கின்றது. நிகழ்வுக்கான ஏற்பாட்டுக் குழு ஒன்றை நாம் இன்றே உருவாக்கிப் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ளவேண்டும். எவ்வாறான குழுவை அமைப்பது, அவர்களின் கடமைகள் என்ன என்பதை எல்லாம் இன்று நாங்கள் தீர்மானிக்க வேண்டும். பொது அமைப்புக்களில் இருந்தும் அரசியல் கட்சிகளில் இருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஒழுங்கமைப்புப் பணிகள் இன்று முதல் தீவிரப்படுத்தப்படவேண்டும். பல தரப்புக்களும் இந்த நிகழ்வை உற்றுநோக்கிக் கொண்டிருக்கின்றன.

நாம் இந்த நிகழ்வை மேற்கொள்ளும் காலம் மிகவும் முக்கியமானது. ஒன்றன் பின் ஒன்றாக தேர்தல்கள் வரும் நிலையில் தமிழ் மக்கள் தங்கள் உணர்வுகள், மனோநிலை மற்றும் கோரிக்கைகளை முன்வைப்பது மிகவும் அவசியமானது. அதி அவசரமான கோரிக்கைகளையே உடனடியாக முன்னிறுத்த உள்ளோம். ஆகவே, கடந்த முறையைவிட கூடுதலான மக்களை இம்முறை நாம் அணிதிரட்டவேண்டும். கிழக்கு மற்றும் ஏனைய இடங்களில் நாம் தொடர்ந்து செய்யவிருக்கும் "எழுக தமிழ்" பேரணிக்கு எமது முதலாவது பேரணி நிகழ்வு உத்வேகம் ஊட்டும் வகையில் அமையவேண்டும்.

முன்னைய "எழுக தமிழ்" பேரணிகள் நடக்கும் போது நாம் பலர் உத்தியோக பதவியில் இருந்தோம். எமக்குப் பதவி வழி அரச அங்கீகாரமும் பாதுகாப்பும் தரப்பட்டன. இம்முறை நாம் அவ்வாறான அரச அங்கீகாரத்துடன் கூட்டத்தில் ஈடுபட முடியாது. எனவே எமது மக்களின் பாதுகாப்பு விடயங்கள் எத்தகைய அரச அங்கீகாரத்துடன் நடைபெறப் போகின்றன என்பதை நாம் பரிசீலித்துப் பார்த்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அண்மைய உயிர்த்த ஞாயிறு நடவடிக்கைகளால் நல்லூர் ஆலயத்தில் கூட பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பேரவைக்கு ஏதேனும் பாதுகாப்புத் தடைகள் விடுக்கப்படுமா என்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஆட்சியாளர்களால் இதுவரை கவனிக்கப் படாத ஆறு விடயங்கள் எமது பேரணியில் வலியுறுத்தப்பட இருக்கின்றன. அவையாவன —

1. எமது பூர்வீக நிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில ஆக்கிரமிப்பு, பௌத்த மயமாக்கல்



மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும். இவை சம்பந்தமான மகாவலி அபிவிருத்திச் சபையின் செயல்கள் ஆராயப்பட்டு சபையின் நடவடிக்கைகள் வட கிழக்கைப் பொறுத்த வரையில் உடன் நிறுத்தப்பட வேண்டுமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டும்.

2. சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் தற்போது ஏற்பட்டுள்ள தேங்கு நிலை மாற்றப்பட்டு உடனே சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளை நடத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3. தமிழ் அரசியல் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்கள் யாவரும் சர்வதேச சட்டக் கொள்கைகளுக்குப் புறம்பான சட்டமொன்றினால் குற்றவாளிகள் ஆக்கப்பட்டவர்கள் என்பதை உலகறியச் செய்ய வேண்டும். குறித்த சட்டம் இன்னமும் கைவாங்கப்படவில்லை.

4. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்பந்தமான நம்பத்தகு விசாரணைகள் நடைபெற வேண்டும். பல மாதக் கணக்கில் போராடி வரும் காணாமல் ஆக்கப்பட்டோர் குடும்பங்களுக்கு குறித்த ஒரு காலத்தினுள் விசாரணைகள் நடைபெறும் என அரசினால் உத்தர வாதங்கள் வழங்கப்பட வேண்டும்.

5. வடகிழக்கு மாநிலங்களை இராணுவ மயமாக்கல் நிறுத்தப்பட வேண்டும். தற்போது இலங்கை இராணுவத்தின் மூன்றில் இரண்டு பங்கு வடகிழக்கு மாகாணங்களிலேயே முகாம் இட்டு உள்ளனர் என்று தெரிய வருகின்றது.

6. இடம் பெயர்ந்த எம் மக்கள் அனைவரும் அவரவர்களின் பாரம்பரிய காணிகளில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். மேற்கண்ட ஆறு விடயங்களே எமது பேரணியில் முக்கியமாக கூறப்படப் போகும் விடயங்கள். எமது அரசியல் தேவைகளை ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவை தமது அரசியல் முன் மொழிவுகள் ஊடாக யாவருக்குந் தெரியப்படுத்தியுள்ளது. அவற்றை நாங்கள் இனிவரும் "எழுக தமிழ்" பேரணியில் வலியுறுத்துவோம். சனாதிபதித் தேர்தலில் நிற்கப் போகும் வேட்பாளர்கள் மேற்படி ஆறு விடயங்களையும் இலகுவாக அனுமதிக்க முடியும். அவற்றைச் செய்யுமாறு நாம் அரசை, அரசாங்கத்தை, சனாதிபதி வேட்பாளர்களை வேண்டுவது எல்லா விதத்திலும் நியாயமானது. எனவே இவற்றை இம்முறை வலியுறுத்துவோமாக!

சிலர் எமது பேரணியில் சேரவிருப்போரைத் தடுக்கக் கங்கணம் கட்டியுள்ளதாக அறிகின்றேன். ஆனால் சுயநல காரணங்களுக்காக, கட்சி நலம் சார்ந்து இவ்வாறான தீர்மானங்களை யார் எடுத்தாலும் அது எமது மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும். நாம் இங்கு கட்சிகளை வளர்க்க முற்படவில்லை. மக்களை ஒன்று சேர்த்து அரசியல் ரீதியாகப் போராடவே ஒன்றுபடுகின்றோம். ஒன்றுபட்டு எமது இன்னலப்படும் மக்களின் விடிவிற்காகப் போராட நினைத்துள்ளோம். ஆகவே எமது பேரணியை இவ்வாறாகக் குழப்ப எத்தனிப்போர் சம்பந்தமாக விழிப்பாக இருங்கள்.

எமக்கு ஒத்துழைப்பு நல்காவிட்டாலும் பரவாயில்லை; உபத்திரவம் தராது இருங்கள் என்று அவர்களிடம் நல்ல முறையில் கூறிவையுங்கள். எமது தமிழ் மக்களின் வருங்காலம் என்பது இப்பேர்ப்பட்ட சிந்தனையுடையவர்களையும் உள்ளடக்கும். நாம் போராடுவது அவர்களுக்காகவுந்தான் என்பதை எவரும் மறத்தல் ஆகாது. அந்த வகையில் அவ்வாறான சிந்தனைகள் எவருக்காவது இருக்குமானால் அவற்றைப் புறந்தள்ளி வைத்து எம்முடன் சேர்ந்து பயணிக்க அவர்களை உள்ளன்புடன் அழைக்கின்றோம்."



# எத்தகைய அச்சுறுத்தல்கள் வந்தாலும் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை

## மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி அமலநாயகி பேட்டி

உயிரை துச்சமென மதித்தே உறவுகளை தேடி வருகின்றோம். எம்மீதான தாக்குதலால் எமது உறவுகளுக்கான போராட்டத்தை தடுத்துவிட முடியாது. ஐ.நா.மன்றத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தினத்தன்று திட்டமிட்டபடி கிழக்கில் போராட்டம் நடைபெறும். என்னால் எழுந்து நடக்க முடியாது விட்டாலும் நொண்டி நொண்டியாவது நானும் அதில் பங்கேற்பது உறுதி என்று வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் துணைத்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவருமான அமலநாயகி தெரிவித்தார்.

கடந்த ஆறாம் திகதி மட்டக்களப்பு உன்னிச்சை வீதியில் பயணத்துக் கொண்டிருந்தபோது திட்டமிட்ட முறையில் விபத்துக்குள்ளாக்கப்பட்ட வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் துணைத்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவருமான அமலநாயகி இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அச்செவ்வியின் முழுவடிவம் வருமாறு...

**கேள்வி: உன்னிச்சைப் பகுதியில் நீங்கள் பயணத்துக்கொண்டிருந்தபோது திட்டமிட்டே விபத்து சம்பவிக்கப்பட்டதாக எந்த அடிப்படையில் கூறுகின்றீர்கள்?**

பதில்:— நான் மரண வீடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக உந்துருளியில் எனது மகளுடன்



மட்டக்களப்பு உன்னிச்சை வீதியில் பயணித்துக் கொண்டிருந்தேன். அச்சமயம் எதிர்த்திசையில் உந்துருளியில் மூன்று பேர் வந்தார்கள். அவ்வாறு வந்தவர்கள் எம்மை நோக்கி தமது உந்துருளியை வேகமாக செலுத்தினார்கள். திடீரென விரைந்து நாம் பயணித்த வீதியின் மறுபுறத்துக்கு வந்தவர்கள் எனது உந்துருளி மீது மோதினார்கள். நானும் எனது மகளும் அந்த இடத்திலேயே விழுந்துவிட்டோம். நாம் கூச்சலிட்டோம். பின்னர் அவர்கள் எம்மை அச்சுறுத்தும் நோக்கத்துடன் பார்த்துவிட்டு அங்கிருந்து விரைவாக மறைந்து விட்டார்கள்.

**கேள்வி: உந்துருளில் வந்தர்வகள் யார் என்பதை அறிவீர்களா?**

பதில்:— எனக்கு மூவரையும் தெரியாது. ஆனால் உந்துருளியில் வந்தவர்களில் ஒருவர் புளொட் அமைப்பினைச் சேர்ந்த முக்கியஸ்தரான மோகன் என்பவரின் மைத்துனராவார். ஏனைய இருவர் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் தெரியாது. ஆனால் எம்மை மோதிவிட்டு தப்பிச் சென்றவர்களில் ஒருவரை பிரதேச இளைஞர்கள் மடக்கிப்பிடித்த சமயத்தில்

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை மீட்பதற்கான போராட்டங்களை ஆரம்பித்தபோது சிறீலங்கா புலனாய்வாளர்கள் என்னை படம்பிடித்தார்கள். காணொளி எடுத்தார்கள். நான் செல்லுமிடமெல்லாம் என்னை பின்தொடர்ந்தார்கள். எனது அயலவர்களிடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்கள். எனது உறவினர்களிடத்தில் என்னை இந்த விவகாரத்திலிருந்து விலகியிருப்பதற்கு அறிவுறுத்துமாறு கோரினார்கள்**

ஏனைய இருவரும் தப்பிச் சென்றுள்ளனர். பிடிபட்ட நபர் மட்டக்களப்பு கரடியனாறு காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

**கேள்வி: காவல்துறை விசாரணைகளை முன்னெடுத்துள்ளதா?**

பதில்:— இந்த விபத்துச் சம்பவம் சம்பந்தமாக என்னிடத்தில் வாக்குமூலம் பெறுவதற்காக காவல்துறையினர் வந்தனர். அப்போது கைது செய்யப்பட்டவர் யார் என்று கேட்டபோது காவல்துறையினர் அவர்கள் தொடர்பில் பூரணமான தகவல்களை தெரிவிக்க மறுத்துவிட்டனர். கைது செய்யப்பட்டவர் களுவாஞ்சிக்குடி நீதவானின் முன்னால் முன்னிலைப்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறினார். ஏனையவர்களை தேடிவருவதாக கூறினார்கள். ஏறாவூர் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அங்கு என்னை அழைக்கின்றபோது மன்றில் ஆஜராகுமாறு கூறிச்சென்றனர். எனது உந்துருளி காவல் நிலையத்திலேயே உள்ளது.

**கேள்வி: உங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துவதற்காக இச்சம்பவம் இடம்பெற்றதென்று கருதுகின்றீர்களா?**



பதில்:— என்னால் முழுமையாக அவ்வாறு கூறமுடியவில்லை. ஆனால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை சேர்ந்த எமது உறவுகளை ஒன்றிணைத்து திட்டமிட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை மீட்பதற்கான போராட்டங்களை ஆரம்பித்தபோது சிறீலங்கா புலனாய்வாளர்கள் என்னை படம்பிடித்தார்கள். காணொளி எடுத்தார்கள். நான் செல்லுமிடமெல்லாம் என்னை பின்தொடர்ந்தார்கள். எனது அயலவர்களிடத்தில் விசாரணைகளை மேற்கொண்டார்கள். எனது உறவினர்களிடத்தில் என்னை இந்த விவகாரத்திலிருந்து விலகியிருப்பதற்கு அறிவுறுத்துமாறு கோரினார்கள்.

இவற்றையெல்லாம் விடவும் எனக்கு நன்மை அளிப்பவர்கள் போன்று வார்த்தை ஜாலம் காட்டி என்னை ஒதுங்கியிருக்குமாறு கூறினார்கள். மாதாந்தம் எனது செயற்பாடுகள் பற்றி அறிக்கையை உயர்மட்ட புலனாய்வு கோரியிருப்பதாக கூறினார்கள். எனக்கு புலம்பெயர் தேசங்களிலிருந்து நிதி அனுப்பப்படுவதாக கூறினார்கள். ஆனால் அவற்றையெல்லாம் கண்டு அஞ்சி எமது நியாயமான கோரிக்கையை கைவிடவில்லை. ஒதுங்கி நிற்கவில்லை. எத்தனை அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படடாலும் நீதிக்கான எமது போராட்டம் எமது உயிருள்ளவரையில் தொடரும்.

**கேள்வி: தற்போது உங்களது நிலைம எவ்வாறு உள்ளது? உங்களுடைய அடுத்தகட்டச் செயற்பாடுகள் என்னவாகவுள்ளன?**

பதில்;:— நான் காலில் காயத்துடன் வீட்டில் முடங்கியுள்ளேன். என்னை வீட்டில் முடக்குவதே அவர்களின் திட்டமாக இருக்கின்றதோ என்று ஐயம்கொள்கின்றேன். இந்த திட்டமிட்ட விபத்துச் சம்பவத்திற்காகவாவது நீதி கிடைக்கின்றதா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். எதிர்வரும் 30ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினத்தினை முன்னிட்டு கிழக்கில் பாரிய போராட்டத்தினை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளோம். அந்த போராட்டத்தைத் திட்டமிட்டபடி முன்னெடுப்போம். எனது கால் காயம் முன்னேற்றமடையாது விட்டாலும் நொண்டிநொண்டியாவது அந்தப்போராட்டத்தில் பங்கேற்பேன். அதில் எந்தவிதமான மாற்றுக்கருத்திற்கும் இடமில்லை.

# அமெரிக்க தூதர் - மகிந்த சந்திப்பு

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய, ஆசிய விவகாரங்களுக்கான முதன்மை பிரதி உதவிச் செயலாளர் அலிஸ் வெல்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

தெற்காசியாவுக்கு உத்தியோகப்பூர்வ பயணம் மேற்கொள்ளும் அவர், குறித்த விஜயத்தின் ஓர் அங்கமாக இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார். இன்று காலை இலங்கையை வந்தடைந்த அவர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். விஜேராமவில் உள்ள மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பின்போது முன்னாள் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி.ரெப்லிட்ஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளர் யாரென இன்றைய தினம் இடம்பெறவுள்ள தேசிய மாநாட்டில் மகிந்த ராஜபக்ச அறிவிக்கவுள்ளார். இந்நிலையில் இந்த மாநாட்டிற்கு முன்னதாக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தும் யாழ்.மாநகர முதல்வர்

## தமிழினத்தை கருவறுக்கும் 5ஜி

**தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மநாகரசபை உறுப்பினர் பார்த்திபன்**



**கடந்த வார தொடர்ச்சி...**

ஆறு அதிகார சபைகளின் அனுமதிகள் பெறப்பட்டே சிமாட் லாம் போல்கள் நிர்மானிக்கப்படலாம். ஆனால் அதன் பெயரில் நிர்மானிக்கப்பட்டு வரும் கோபுரங்களை அமைப்பதற்கு கூட எவ்விதமான ஒழுங்குவி—திகளும் பின்பற்றப்படாது யாழ்.முதல்வரின் அதிகாரம் பாய்ந்து செல்கின்றது என தமிழர் கல்வித்துறைக்கு அரும்பணியாற்றி யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி நாடாளவிய ரீதியில் தனக்கென்று தடம்பதித்திருந்த பொருளியல் ஆசான் மறைந்த வரதாராஜனின் புதல்வரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினருமான வ.பார்த்திபன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அச்செவ்வியின் இரண்டாவது பகுதி வருமாறு

**கேள்வி: இந்த விடயங்களை சபையின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு சென்றிருக்கவில்லையா?**

பதில்:— முன்னதாக 19—06—2019 அன்று சிமாட் லாம் போல்கள் பூட்டப்படுகின்ற இடங்களில் மக்கள் தமது பலத்த எதிர்ப்பை வெளிகாட்டி வருகின்றனர். உதாரணமாக நல்லூர் செட்டித்தெருவில் குறித்த இடத்தில் அதனை பூட்டுவதற்கும் மிக கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். எனவே இது பற்றி விவாதித்து மக்களுக்கு தெளிவூட்ட வேண்டும். ஏன் என்றால் அபிவிருத்தி என்பது மக்களின் விருப்பப்படி மக்களின் பங்களிப்புடன் நடைபெற வேண்டியது என்ற நிலைப்பாட்டில் சிமாட் லாம் போல்கள் அமைப்பது தொடர்பான 18 இடங்களையும் சபையில் தெரிவித்து அதற்கான அனுமதியினை பெற்று அதன்பிறகே பொருத்துமாறு கோரினோம். ஆனால் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

சிமாட் லாம் போல்களுக்குரிய நிறுவனத்திற்கும் யாழ்.மாநகர சபைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் நான்காவது பந்தியில் மேற்படி சிமாட் லாம் போல்களில் சிறிய ரக செலுனர் அன்ரனாக்கள் பூட்டப்படும் என்று உள்ளது. இந்த அன்ரனாக்கள் தொடர்பாக மேலதிக தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கை ஆகியவற்றையும் சபையில் கோரியிருந்தோம். ஆனால் அதுவும் எங்களுக்கு தரப்படாமலேயே சிமாட் லாம் போல்கள் அமைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

மேற்படி சிமாட் லாம் போல்களில் கமராக்கள் பூட்டப்படுகின்றன. அது மிகவும் அத்தியாவசியமான விடயம். ஆனால் தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற சிமாட் லாம் போல்கள் சன நெருக்கடியான குடியிருப்புக்களுக்கு மத்தியில் அமைக்கப்படுகின்றன. இவ்வாறு பூட்டப்படும் கமராக்களின் மூலம் குடியிருப்புக்களில் வாழ்கின்ற மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும்

எனவே மேற்படி காரணங்கள் தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுப்பது தொடர்பிலும் மற்றும் மக்கள் சிமாட் லாம் போல்கள் அமைக்கும் இடங்கள் தொடர்பில் பலத்த ஆட்சேபனைகளை தெரிவித்து வருவதனாலும் உடனடியாக விசேட பொதுக் கூட்டத்தினை ஒழுங்குபடுத்துமாறு கேட்டுக்கொண்டோம்.

அதே நேரம் அவ்வாறு விசேட பொதுகூட்டம் ஒழுங்குபடுத்த முடியாது விடில் ஜுலை மாதம் 18ஆம் திகதி நடைபெற இருந்த மாதாந்த பொதுக்கூட்டத்தில் இதுபற்றி ஆராய்வதற்கான நேரத்தை ஒதுக்கித்தருமாறும் அது வரைக்கும் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் சிமாட் லாம் போல்கள் அமைக்கும் செயற்பாடுகளை உடன் நிறுத்துவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மாநகர முதல்வரிடம் கோரிக்கை விட்டிருந்தோம்.

விசேட பொதுக்கூட்டம் ஒன்றினை ஒழுங்குபடுத்துவது மற்றும் சபையில் மேற்கூறப்பட்ட விடயப்பரப்புக்கள் விவாதிக்கப்பட்டு மக்கள் நலம்சார்ந்து மக்களின் விருப்பத்தை அறிந்து அவர்களின் அனுமதியுடன் குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக முடிவு எட்டும் வரை குறித்த திட்டத்தை நிறுத்திவைப்பதற்குரிய கடிதமும் யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டது. எனினும் அடுத்த மாநகர சபை கூட்டத்திற்கு முன்னதாக மாநகர முதல்வர் ஊடகவியலார் மாநாடொன்றைக் கூட்டி மக்களின் விழிப்புணர்வுக்கான நாம் முன்னெடுத்த அனைத்து நடவடிக்கைகளையும் விமர்சித்து பல்வேறு குற்றச்சாட்டுக்களை எம்மீது அடுக்கி விட்டார்.

**கேள்வி: மாநகர சபையின் அமர்வு இடம்பெற்றதா? சிமாட் லாம் போல்களின் பாதிப்பு குறித்து சுட்டிக்காட்டினீர்களா?**




பதில்:— ஆம், ஜுலை 18ஆம் திகதி மாநகர சபையின. அமர்வு நடைபெற்றது. இதன்போது நான் பல்வேறு விடயங்களை சபையின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். அவற்றின் முக்கிய விடயங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிட விளைகின்றேன். சிமாட் லாம் போல்கள் அமைப்பதற்கான தொடர்பிலான ஒப்பந்தத்தில் அவற்றை அமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மத்திய சூழல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி சபை, தொலைத்தொடர்பு அதிகாரசபை, விமானப்போக்குவரத்து அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிரதேச சுகாதார அதிகாரி ஆகியோரிடமும் அனுமதி பெற்று அதன் பிரதிகள் ஆவணப்படுத்தலுக்காக மாநகர சபையில் சமர்ப்பிக்கவேண்டும் என்றுள்ளது. ஆனால் அனுமதி பெறப்பட்டதாக கூறப்பட்ட ஆறு அதிகார சபைகளில் எந்த அனுமதியும் பெறவில்லை என்பதற்கு அப்பால் பல முரண்பாடுகள் அதில் காணப்படுகின்றன. மே மாதம் இடம் பெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் கம்பத்தில் பொருத்தப்படும் பொருட்கள் அனைத்திற்கும் மாநகரசபையின் திட்டமிடல் பகுதியில் அனுமதி பெற்று பொருத்தவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த கம்பம் அமைப்பதற்கு யாழ்.மாநகர சபை திட்டமிடல் பகுதியில் அனுமதி பெறப்பட்டதா?



தற்போது யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வெட்டப்படுகின்ற கிடங்குகள் அனைத்தும் யாழ்.மாநகர சபையின் வீதி ஓரங்களில் அதாவது வீதியின் சோல்டர்களில் வெட்டப்படுகின்றன. இதற்கான அனுமதி எவ்வாறு வழங்கப்பட்டது. ஒரு சாமானிய குடிமகன் ஒருவர் தனது வீட்டுக்கு ஒரு மதிலைக்கட்டுவது என்றால் எத்தனையோ படிமுறைகள். ஆனால் இவ்வளவு பெரிய கோபுரம் ஒன்றை அமைக்கும் போது எந்த ஒழுங்குகளையும் பின்பற்றத் தேவை—யில்லையா?

2019.06.21அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியில் யாழ்.மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட வீதிகள், அதனுடைய நீளம் மற்றும் வீதிக் கோட்டு எல்லை என்பன வெளியிடப்பட்டன. உதாரணமாக நல்லூர் செட்டித்தெருவின் வீதிக்கோட்டு எல்லை 20அடி என்று உள்ளது. அதே போல் கஸ்தூரியார் வீதியின் வீதிக்கோட்டு எல்லை 33 அடியாக உள்ளது அவ்வாறு எல்லாம் இருக்கும்போது இரு வீதிகளிலும் வெறும் 10அடிக்குள் குறித்த பாரிய கம்பம் நடுவதற்கு எவ்வாறு அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்படி கோபுரங்கள் குறித்த இடங்களில் அமைக்கும் போது யாழ்.மாநகர சபையில் அதனுடைய திட்டவரைபினை கொடுத்து அனுமதிச்சான்றிதழ் பெற வேண்டும் என்பது நியதி. அந்த நியதி இத்திட்டத்தில் பின்பற்றப்படவில்லை. இங்கு அமைக்கப்பட்டுள்ள கோபுரங்களின் அடித்தளம் எவ்வளவு உறுதியானது? அதன் அடித்தளத்திற்குரிய ஆழம் எவ்வளவு? அதனுடைய கொங்கிறீட்டின் தடிமன் எவ்வளவு என்பது போன்ற எந்த ஒரு அடிப்படைத் தரவுகள் கூட எம்மிடம் இல்லை.

**தொடர்ச்சி அடுத்தவாரம்...**

# பூகோள பிராந்தியப் போட்டியில் புதைந்துபோயுள்ள நாடுகளுக்கு தற்போது தமிழ் மக்களின் வாக்குகள் தேவை

**வேல்ஸ் இல் இருந்து அருஷ்**

தென்னிலங்கையில் சிறீலங்கா அரச தலைவர் தேர்தலுக்கான வேலைகள் இந்த மாதம் முதல் தீவிரம் பெற்றுள்ளது. சிங்கள தேசத்தின் இரு பெரும் கட்சிகளும் தமது வேட்பாளர்கள் தொடர்பில் வேகமாக செயற்பட்டு வருகின்றன. காலம் சென்ற சிறீலங்காவின் முன்னாள் அரச தலைவர் ஆர் பிரேமதாசாவின் மகனான சஜித் பிரேமதாசாவை நிறுத்துவது தொடர்பில் ஐ.தே.க சிந்தித்து வருகையில், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை நிறுத்துவது தொடர்பில் எதிர்த்தரப்பான மகிந்த தரப்பு செயற்பட்டு வருகின்றது.

அதற்கு அமைவாக கோத்தபாய தனது அமெரிக்க குடியுரிமையையும் துறந்துள்ளதாக அவரின் மற்றுமொரு சகோதரரான பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார். இரட்டைக் குடியுரிமையைக் கொண்ட அவர் மீது அமெரிக்காவில் தொடுக்கப்பட்ட வழக்கே அவரின் குடியுரிமையை பறித்துள்ளது.

அதாவது 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீதான போரை ஆயுதவழிகளில்




தோற்கடித்தபோது துட்ட கெமுனுக்களாக தென்னிலங்கையில் போற்றப்பட்டவர்கள், தற்போது பதவி இழந்து, எதிர்க்கட்சியாகி, அமெரிக்க குடியுரிமை இழந்து தமிழ் மக்களின் வாக்குக்களுக்காக காத்திருக்கின்றனர். ஆனால் அவர்களிடம் பேரம்பேசும் தகமையிலோ அல்லது அவர்களை மேலும் தண்டிக்கும் வலுவுடனோ தமிழ் மக்கள் இல்லை என்பது தான் துன்பமானது. அதற்கான காரணம் சோரம்போன தமிழ் அரசியல் தலைமைகளும், தமக்கிடையே மோதிக்கொள்ளும் புலம்பெயர் அமைப்புக்களும் தான்.

ஆனால் மகிந்த ராஜபக்சவுக்கும் அவரின் சகோதரர் கோத்தபாயவுக்கும் இந்த நிலை ஏற்பட்டதற்கு ஒரு சில தமிழ் அமைப்புக்களும், அவர்களுக்கு துணையாக செயலாற்றிய அனைத்துலக அமைப்புக்களும், சிறீலங்காவை மையம்கொண்டுள்ள பூகோள அரசியலுமே காரணம். தற்போதைய அரச தலைவர் தேர்தல் என்பது இந்த பூகோள அரசியலை மேலும் ஒரு சிக்கலான நிலைக்கு மாற்றவல்லது என்பதை மேற்குலகம் நன்கு அறியும். எனவே தான் கோத்தபாயவை குறிவைத்துள்ளது அமெரிக்கா, அது மட்டுமல்லாது அடுத்த ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் தற்போதைய அரசின் கைகளை முறுக்கி “சோபா” என்ற படைத்துறை உடன்பாட்டில் கைச்சாத்திட வைக்கவும் அமெரிக்கா கடும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

ஏப்பிரல் மாதம் சிறீலங்காவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் பின்னனியும் அதுவே, அதாவது தேர்தலுக்கு முன்னர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் புதிய அரசு அதனை ஒன்றும் செய்ய முடியாது என்பது அமெரிக்காவின் கணிப்பு. ஆனால் அமெரிக்காவின் கணிப்பை இந்தியா தனது மறைமுக நடவடிக்கை மூலம் முறியடித்துவிட்டது.

தற்போது தேர்தல் நெருங்கிவரும் வேளையில் மகிந்த தரப்புடன் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது பிரான்ஸ் அரசு. அமெரிக்கா தான் நேரிடையாக இறங்காது பிரான்ஸ் மூலம் ஒரு நகர்வை மேற்கொண்டுள்ளது. அதற்கான காரணம் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன அரசு ஆரம்பிக்கவுள்ள இந்துசமுத்திரத்தை கடந்து செல்லும் கப்பல்களுக்கான எரிபொருள் நிரப்பும் நிலையமாகும்.

இந்த நிலையம் இயங்குமானால் அமெரிக்காவின் உதவியுடன் வளைகுடா பகுதியில் உள்ள துறைமுகங்களின் வர்த்தகம் வீழ்ச்சியடைவதுடன், அவற்றின் முக்கியத்துவமும் குறைந்துவிடும். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் இடம்பெறும் வர்த்தகப்போரிலும் சீனாவை பணியவைக்க அமெரிக்காவால் முடியவில்லை. மாறாக ஈரானிடம் தனது அதிநவீன உளவு விமானத்தை இழந்த அமெரிக்காவின் நடவடிக்கை தற்போது சீனா—ஈரான்—ரஸ்யா உறவுகளைப் பலப்படுத்தும் வரை சென்றுள்ளது. இந்த நிலையில் சிறீலங்காவில் அடுத்த ஐந்து ஆண்டுகள் இடம்பெறவுள்ள ஆட்சி என்பது மேற்குலகத்திற்கு முக்கியமானது. ஆபிரிக்கா வரை சீனாவின் அதிகாரம் விரிவாக்கம் பெற்றுவந்தாலும் அதன் இந்து சமுத்திரப் பிராந்தியத்திற்கான பிரவேசம் என்பது முன்னர் மியான்மார் ஊடாக மட்டுமே இருந்தது.

ஆனால் தற்போது சிறீலங்காவின் அம்பாந்தோட்டை துறைமுகம் அதனை இலகுவாககியுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளின் பலவீனம் சீனாவின்



பணிகளை இலகுவாக்கியுள்ளது. தற்போது உள்ள இந்த நிலையில் தமிழ் மக்களின் வாக்குகளை தமக்கு சாதகமாக தென்னிலங்கை அரசியலில் பயன்படுத்தும் வியூகங்கள் பூகோள அரசியல் போட்டியில் புதைந்து போயுள்ள இந்த நாடுகளிடம் உண்டு. அதற்கு தமிழ் அரசியல் வாதிகளை பயன்படுத்தும் திட்டத்தையும் அவர்கள் கொண்டுள் ளனர். ஆனால் தென்னிலங் கையில் எந்தக் கட்சி ஆட்சி அமைத்தாலும் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை, ஆனால் எமது வாக்குகளை கொண்டு எம்மை இந்த நாடுகள் ஏமாற்றுவதை நாம் தடுத்தாக வேண்டும். அதன்மூலம் தான் நாம் எமது அரசியல் பிரசன்னத்தை தென்ஆசியாவில் வெளிப்படுத்த முடியும்.

எனவே எதிர்வரும் அரச தலைவர் தேர்தலையும், அதனைத் தொடர்ந்துவரும் எல்லா அரச தலைவர் தேர்தல்களையும் தமிழ் மக்கள் புறக்கணிக்கும் முடிவை மேற்கொள்ளவேண்டும். அதற்கான கலந்துரையாடல்களை தளத்திலும்ஜஜ புலத்திலும் தேசியம் சார்ந்தவர்கள் மேற்கொள்வதுடன், தமிழ் மக்களுக்கான விழிப்புணர்வு பிரச்சாரத்தையும் அவர்கள் ஆரம்பிக்க வேண்டும்.



**நிலத்தை இழந்து வீதியில் நிற்கும் முல்லைத்தீவு கேப்பாபுலவு சிறுவர்கள்**

தமது பிரச்சாரத்திற்கு சமூகவலைத்தளங்களை பயன்படுத்தப்போவதாக மகிந்தவின் புதல்வர் நாமல் கூறியது போல நாமும் சமூகவலைத் தளங்களில் ஊடாக தற்போதே எமது விழிப்புணர்வு போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கு ஏதுவான தெளிவான சிந்தனைகளை எமது இளம் தலைமுறைகளிடம் நாம் தற்போதே விதைக்க வேண்டும்.

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லை மாவட்ட அமைப்பாளருக்கு கொலை மிரட்டல்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் திலகநாதன் கிந்துஜனுக்கு கிராமசேவையாளர் ஒருவரால் கொலை மிரட்டல் விடப்பட்டுள்ளதுடன் அவரின் உயிருக்கு அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிராம சேவையாளர் தன்னை கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக மாங்குளம் காவல் நிலையத்தில் முறைப்பாட்டினை வழங்கியுள்ளார். நீண்ட நாட்களாக குறித்த கிராம சேவையாளர் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் அமைப்பாளருக்கு எதிரான கருத்துக்களை பரப்பி வந்துள்ளதாகவும் போலி முகநூல் ஒன்றினை இயக்குவதாகவும் அதனூடாக தன்னுடன் தொடர்புபட்ட விடயங்கள் வெளியிடப்படுவதாகவும் குற்றம் சாட்டி கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பலம்பொருந்திய கூட்டு முன்னணி இல்லையேல் தமிழருக்கென்று ஒன்றுமில்லை

**மு.திருநாவுக்கரசு**

ஒரு நூற்றாண்டுக்கு மேலான ஈழத்தமிழரின் அரசியல் வரலாற்றை கணக்கிட்டு பார்க்கும் போது அது ஒரு நூற்றாண்டுக்கு முன் தொடங்கிய இடத்திலிருந்து மேலும் பின்னோக்கிச் சென்றுள்ளதையும் மேலும் தேய்ந்து சிறுத்து உள்ளதையும் காணலாம்.



பெருந்தலைவர்கள் ஆனால் பெரும் தோல்விகள். இத்தனைக்குப் பின்பும் தோல்விகளுக்கும், வீழ்ச்சிகளுக்கும், அழிவுகளுக்குமான காரணங்களையும், அவற்றிற்கான பொறுப்பாளர்களையும் கண்டுகொள்ள நாம் இன்னும் தயாரில்லை என்பது மேற்படி அடைந்த அனைத்து தோல்விகளையும்விட பெரும் தோல்வியாகும்.

இன அழிப்பு நடவடிக்கைகளை சிங்களத் தலைவர்கள் திட்டமிட்ட வகையில் காலத்துக்கு காலம் பொருத்தமாக முன்னெடுத்து வருகிறார்கள் என்பது உண்மை. அதேவேளை சிங்களத் தலைவர்களின் இத்தகைய இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு துணைபோகும் வகையில் அல்லது அதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் தமிழ் தலைவர்களின் அரசியல் வழிநடத்தல்கள் அமைந்துள்ளன. இந்த வகையில் தமிழ் மக்களை அரசியல் படுகுழியில் வீழ்த்தியதற்கான பெரும் பொறுப்பு தமிழ்த் தலைவர்களைச் சார்ந்தது என்கின்ற இன்னொரு பக்கத்தையும் கருத்திலெடுக்க தவறக் கூடாது.

வரலாற்றில் பல வேளைகளில் தோல்வியின் வடிவில் வெற்றியையும் வெற்றியின் வடிவில் தோல்வியையும் நண்பனின் வடிவில் எதிரியையும் எதிரியின் வடிவில் நண்பனையும் காணமுடியும்

என்னவன் — உன்னவன், தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் மற்றும் முற்கற்பிதங்கள் என்பனவற்றை எல்லாம் தாண்டி தமிழ் மக்களின் அரசியலை சீர்தூக்கிப் பார்க்கும் மனப்பாங்கு வேண்டும். வெற்றி தோல்விகளை புரிந்தேற்று மக்களின் நன்மை கருதி தலைமைத்துவ தவறுகளை சரி செய்து முன்னேற தயாராக வேண்டும்.

தேசிய தலைமைத்துவம், தேசிய இனப்பிரச்சினைக்கு தலைமை தாங்குதல் போன்ற விடயங்கள் வரலாற்றில் எப்போதும் முக்கியத்துவம் கொடுத்து சிறப்புடன் நோக்கப்படும் அம்சங்களாகும். புரட்சி என்பது குறித்த வர்க்க அடிப்படையிலான தலைமைத்துவமாகும். ஆனால் தேசிய விடுதலை என்பது சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் பிரி—வினரையும், பல்வகைப்பட்ட வர்க்கத்தினரையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்படும் ஒரு பரந்துபட்ட மக்கள் அமைப்பாகும்.

இதனால் ஒரு தேசிய தலைவன் என்பான் பல்வேறு பிரிவினரையும் பல்வேறு தரப்பினரையும் பல்வேறு வர்க்கத்தினரையும் அரவணைக்க கூடிய சிறப்பியல்புகள் உள்ளவராக இருக்க வேண்டும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட இனக் குழுக்களையும், இனப் பிரி—வினர்களையும் மற்றும் மக்கள் பிரிவினர்களையும் ஒரு கோட்டில் இணைத்து வெள்ளை—யின ஆதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் நெல்சன் மண்டேலா வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை பெற்றார். ஒரு தேசியத் தலைவன் என்பவன் பல்வேறு பிரிவினரையும் , பல்வேறு தரப்பினரையும் அரவணைக்க வல்லவனாய் , இதயசுத்தி உள்ளவனாய், பரந்த மனப்பாங்கு உடையவனாய் காணப்பட வேண்டும். ஈழத் தமிழர்கள் அளவால் ஒரு சிறிய தேசிய இனம். எதிரியோ மிகவும் பலம் வாய்ந்த அரச அமைப்புடன் கூடிய அளவால் பெரிய இனம். இந்நிலையில் ஈழத்தமிழர் தமக்கிடையே கூறுபட்டுக் கிடக்காமல், தமக்குள் பிளவுண்டு, சிறுத்து , அழிந்து போகாமல் பெரிதும் ஐக்கியப்பட்டு பரந்த அடிப்படையிலான ஒரு பலமான கூட்டு முன்னணி ஒன்றை உருவாக்க வேண்டும். பலமான ஒரு பரந்த கூட்டு முன்னணி இல்லையேல் ஈழத் தமிழ் மக்களுக்கு என்று ஒன்றுமில்லை.

ஈழத் தமிழரின் வரலாற்றை ஒரு கணம் கண்கொண்டு திரும்பிப் பார்த்தால் தொடங்கிய இடத்தைவிடவும் அதிகம் பின்னோக்கி சென்றுவிட்டதை காணலாம். இலங்கை சுந்திரம் அடையும் போது தமிழ் மக்களின் தாயகமான வடக்கு— கிழக்குப் பகுதி சிங்களக் குடியேற்றங்கள் இன்றி முற்றிலும் தமிழ் பேசும் மக்களால் நிறைந்திருந்தது.

தமிழரை சனத்தொகை ரீதியாகவும், இனப்பரம்பல் ரீதியாகவும், குறைப்பதையும் , சிதைப்பதையும் அதன்வழி தமிழினத்தை அழிப்பதையும் எதிரி தனது முதல் இலக்காக கொண்டான். சுதந்திரம் அடைந்தை உடனடுத்து டி. எஸ். சேனநாயக அரசாங்கம் மலையகத் தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை என்பனவற்றை பறித்து அவர்களை அரசியல் அநாதைகளாகவும் நாடற்றவர்களாகவும் ஆக்கியதன் மூலம் தமிழினத்தின் சனத்தொகை பலத்தையும் அரசியல் அதிகாரத்தையும் ஒரு முனையில் உடைத் தெறிந்தார்.

கிழக்கே திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி கல்லோயா, அல்லை — கந்தளாய் குடியேற்றத் திட்டங்களின் வாயிலாக சிங்கள சனத் தொகையை கிழக்கு மண்ணில் அதிகரித்தார். தமிழர் வாழும் வடக்கு — கிழக்கு மாகாணங்கள் ஒரு நாள் இந்தியாவின் மாநிலமாக மாறி—விடக்கூடிய ஆபத்து உண்டு என்ற தனது கவலையை சேனநாயக்க ஓர் ஆங்கில கனவானிடம் தெரிவித்த போது அதனை தடுப்பதற்கான வழியாக சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளுமாறு



அந்த ஆங்கில கனவான் ஆலோசனை கூறியதன் பெயரில் டி. எஸ். சேனநாயக்க சிங்கள குடியேற்றங்களை ஆரம்பித்தார் என்று ஒரு செவிவழி தகவல் உண்டு.

எப்படியோ அத்தகைய சிங்களக் குடியேற்றங்களால் முதலில் கிழக்கு மாகாணம் பறிக்கப்பட்டு தமிழ் மக்கள் அங்கு சிறுபான்மை—யினர் ஆக்கப்பட்டு விட்டனர். அதன் தொடர்ச்சியாக வடக்கு மாகாணத்திலும் மணலாற்றில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வடக்கும் கிழக்கும் புவியல் தொடரப்பற்ற பகுதியாக ஆக்கப்படும் நிலை தற்போது பெரிதும் வளர்ந்துள்ளது.

உடும்புக்கு வால் இருப்பது அதனை அதன் வாலால் கட்டுவதற்கே என்பது வேட்டைகாரனின் பார்வையாகும். அப்படி தமிழரைத் தமிழ்த் தலைவர்களால் கட்டிப்போடும் வித்தையை சேனநாயக்க ஆரம்பித்து வைத்தார்.

தனிச் சிங்களச் சட்டம் நிறைவேற்றப்பட்டமை , போலீஸ் மற்றும் நிர்வாக வகைகளிலான ஒடுக்குமுறை 1983 கறுப்பு ஜூலை உட்பட 1958 ஆம் ஆண்டு போன்ற இனக்கலவர வடிவிலான பல்வேறு காலகட்ட இனப்படுகொலைகள் , ""பயங்கரவாத தடுப்புச் சட்டம் "" மற்றும் இராணுவ ஒடுக்குமுறைகள், படுகொலைகள் , முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை என சிங்கள மேலாதிக்கம் தமிழ் மண்ணை பெரிதும் ஆக்கிரமித்து கபளீகரம் செய்து கொண்டுள்ளது.

1979ஆம் ஆண்டு ""பயங்கரவாதத் தடைச் சட்டம்"" நிறைவேற்றப்பட்டு வடக்குக்கு இராணுவம் அனுப்பப்பட்ட போது இலங்கையின் மொத்த இராணுவம் 8500 வரையான சிப்பாய்களை கொண்டிருந்தது. தற்போது இலங்கையின் மொத்த படையினர் தொகை 3,46,000. இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் தமிழ் மண்ணில் நிலை கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலத்துக்குள் குறிப்பாக சுதந்திரத்தின் பின் சிங்கள பௌத்த மேலாதிக்கமானது அனைத்து வகையிலும் தமிழர் மீதான தமது ஆக்கிரமிப்புகளை பெரிதும் முன்னெடுத்து தமிழரை மேலும் மேலும் கொடுமைப் படுத்துவதிலும் சிறுக்கப் பண்ணுவதிலும் வெற்றி பெற்றுள்ளது. தமிழ் மக்களின் சனத்தொகை விகிதாசார ரீதியில் மிகப் பெரிய அளவில் வீழ்ச்சியடைந்து செல்கிறது. ஒரு தமிழ் மகனின் , ஒரு தமிழ் மகளின் ,ஒரு தமிழ் தந்தையின் , ஒரு தமிழ் தாயின் இலட்சியம் என்ன என்று அவர்களிடம் கேட்டால் வெளிநாடு செல்வதுதான் தமது இலட்சியம் என்று சொல்லும் அளவுக்கு நிலைமை அதிகம் அதிகம் மோசமடைந்துள்ளது. இந்நிலையில் தமிழ் தலைவர்கள் எனப்படுவோர் அதிகம்

பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் . அது உள்நாட்டிலும் கூடவே புலம்பெயர் நாடுகளிலும் அவசியமானதாகும். ஒரு மாகாண அமைச்சர் குற்றவாளி என குற்றம் காணப்பட்டாலும் அவரை பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை என்று இலங்கையின் நீதித்துறை தீர்ப்பளித்துள்ளது. மாகாண சபைகள் அதிகாரம் அற்றவை என்ற உண்மையை தெளிவாக பறைசாற்றும் வகையில் இது அமைந்துள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்கள் , மாகாண சபை தேர்தல்கள் சனாதிபதித் தேர்தல் என்பவற்றின் வாயிலாக தமிழ் இனம் பலவீனமானது என்பதையும் அது தேசிய முக்கியத்துவம் குறைந்த ஓரினம் என்பதை நிரூபிக்கக் கூடிய வகையில் சிங்கள பேரினவாத சக்திகள் செயற்பட்டு வருகின்றன.

மேற்படி தேர்தல்களில் எல்லாம் சிங்களத் தேசியக் கட்சிகள் , தேசிய கட்சிகளுடன் கைகோர்க்கும் சார்புக் கட்சிகள், மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் என்போர் எல்லாம் கைகோர்த்து செயல்படும் நிலையில் தமிழ் தேசியத்திற்கான பிரதிநிதித்துவம் தொகை அளவில் குறைவானதாக காட்சியளிக்க கூடிய ஆபத்துண்டு.

இந்நிலையில் தமிழ் தேசியம் பற்றி பேசும் மாற்று தலைமைத்துவத்தை கையில் எடுத்துள்ள தமிழ் தலைவர்கள் அதற்கான ஒரு பலம் பொருந்திய பரந்த கூட்டு முன்னணியை உருவாக்க வேண்டும்.

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தலைவர். சனநாயக அடிப்படையில் இலங்கையிலேயே அதிக வாக்குகளைப் பெற்ற ஒரு முதலமைச்சர். ஆதலால் மக்கள் தீர்ப்புக்குப் பணிந்து அவரை அடிப்படையாகக் கொண்டு ஒரு பலம் வாய்ந்த பரந்த கூட்டு முன்னணியை பல்வேறு அமைப்பினரும் , பொது அமைப்புகளும் , கட்சிகளும் இணைந்து உருவாக்க வேண்டும்.

ஒரு தெளிவான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வரைந்து அதன் அடிப்படையில் ஒரு கூட்டு முன்னணியை உருவாக்க வேண்டும்.

**1. சிங்களத் தேசிய கட்சிகளுக்கும் அவற்றுக்கு சார்பான கட்சிகளுக்கும் எதிரான கூட்டு முன்னணி. இதுவே இதன் முதலாவது அடிப்படையாக அமைய வேண்டும்.**

**2. சிங்களக் குடியேற்றங்களை தடுப்பதற்காக களத்தில் இறங்கி நேரடியாக போராட சம்மதிப்பது.**

**3. போர்க்குற்றம், காணாமல் ஆக்கப்பட்டோர் என்பவற்றுக்கான சர்வதேச விசாரணையை கோரி அதன் பொருட்டு நேரடிப் போராட்டத்தில் ஈடுபடுவது.**

**4. யுத்த விதவைகள் மற்றும் அங்கங்களை இழந்தவர்களுக்கான மறு வாய்ப்பை ஏற்படுத்தவல்ல வகையில் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் நிதிகளை திரட்டி அவர்களின் மறுவாழ்வுக்காக இதய சுத்தியுடன் செயற்படுவது.**

**5. வடக்கும் கிழக்கும் பிரிக்கப்பட முடியாத தமிழரின் தாயகம். அதன் அடிப்படையில் அவர்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்வது.**

அதிக பிரகடனங்களை முன்வைப்பதில் பயனில்லை. உடனடி தேவைகளைக் கருத்தில் கொண்டு, உடனடியாகச் செய்ய வேண்டியதென்றவாறான மேற்கண்ட குறைந்தபட்ச அடிப்படைகளின் கீழ் ஒரு தமிழ் தேசிய கூட்டு முன்னணியை உருவாக்க வேண்டும் . இதில் இணைபவர்கள் மேற்படி கொள்கையில் இருந்து அல்லது வேலைத்திட்டத்தில் இருந்து விலகும் போது அவர்களின் பதவி இயல்பாகவே விலக்கப்பட்டதாக அல்லது பறிக்கப்படுவதாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

மேற்படி கூட்டு முன்னணியில் இணையும் கட்சிகளோ அல்லது பொது அமைப்புக்களோ தேர்தலில் பெறும் வாக்கு விகிதாசாரத்திற்கேற்ப அவர்களின் மத்திய குழு உறுப்பினர் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

மத்திய குழுவில் ஒரு மனதாக தீர்மானம் எடுக்கப்பட தவறும் வேளைகளிலெல்லாம் கண்டிப்பாக இரகசிய வாக்கெடுப்பின் மூலம் அதற்குரிய பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும். எத்தகைய பிரச்சனைகள் ஏற்படும் போதிலும் இறுதியிலும் இறுதியாக மேற்படி மத்திய குழுவின் இரகசிய வாக்கெடுப்பில் எடுக்கப்படும் தீர்ப்பே இறுதியானது.

இதுவே குறைந்தபட்ச உடனடி சனநாயக ஏற்பாடாகும். எனவே சனநாயகத்தை நம்பி, அதன் அடிப்படையிலான ஒரு தேர்தல் கூட்டு முன்னணியை உருவாக்க வேண்டியது அவசியம். அந்தக் கூட்டு முன்னணி ஒரு தனிப்பட்ட நபருக்கு அல்லது ஒரு கட்சிக்கு என்று வீட்டோ அதிகாரங்களை வழங்குவதாக அல்லாமல் அதிகாரம் கொண்ட மத்திய குழுவினால் அது நிர்வகிக்கப்பட வேண்டும்.

எப்படியோ ஒரு நூற்றாண்டின் பின்பு , ஒரு நூற்றாண்டு கால அனைத்து போராட்டங்களின் பின்பு, அனைத்து பெரும் தலைவர்களின் பின்பு, அனைத்துப் போராட்ட வழிமுறைகளின் பின்பு , இன்றைய நிலையில் , இறுதி அர்த்தத்தில் சிங்கள மேலாதிக்கத்தின் இரும்பு சப்பாத்து காலடியில் தமிழ் இனம் வீழ்ந்து அடிமைப்பட்டு கிடக்கின்றது.

திரு.விக்னேஸ்வரன் தலைமையில் ஒரு பலம் பொருந்திய கூட்டு முன்னணியை உருவாக்குவதை தவிர தமிழ் மக்களுக்கு வேறு எந்தொரு மாற்று வழியும் தற்போது கிடையாது .

இன்றைய உலகம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு ஊடாகவே சர்வதேச அரசியலை அணுகும் போக்கை கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லையேல் நிச்சயம் அந்தப் போராட்டத்திற்கு அங்கீகாரம் இருக்காது. இந்தியாவோ, அமெரிக்காவோ, மேற்குலக நாடுகளோ எவையாயினும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைதான் கோரி நிற்கும்.

## வவுனியாவில் விக்னேஸ்வரனின் கட்சி அலுவலகம் திறப்பு

வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியின் கட்சி அலுவலகம் வவுனியாவில் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா மன்னார் வீதி கற்பகபுரம் பகுதியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை இந்த அலுவலகம் திறந்துவைக்கப்பட்டது. வவுனியா தாண்டிக்குளம் முருகன் கோயிலில் இன்று காலை விசேட வழிபாடுகளை மேற்கொண்ட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை, மன்னார் வீதி வழியாக இளைஞர்கள் ஊர்வலமாக அழைத்து வந்தனர். அதன் பின்னர் அவர் கட்சி அலுவலகத்தை திறந்து வைத்தார்.




இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் ம.தியாகராஜா, கட்சியின் யாழ். மற்றும் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர்கள், இளைஞர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## கோத்தாவுக்குள் ஐக்கியமாகிறார் மைத்திரி

எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் பொதுஜனபெரமுன சார்பில் சனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவாரென தெரிவிக்கப்படும் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவளிக்க சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

பொதுஜன முன்னணியுடன் இணைந்து கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் சுதந்திரக்கட்சி கோத்தபாய ராஜபக்சவுடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடும் என சனாதிபதி முன்னாள் சனாதிபதி மகிந்தவுக்கு தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்சவுடன் ஒரு உடன்படிக்கையிலும் பொதுஜனமுன்னணியுடன் மற்றுமொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடப்போவதாக சிறிசேன தெரிவித்துள்ளார். இதேவேளை மாகாணசபை தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதற்காக நீதிமன்றத்தின் ஆலோசனையை பெறுவதற்கான முயற்சிகளையும் சனாதிபதி ஆரம்பித்துள்ளார்.

### 2ம் பக்கத் தொடர்ச்சி

நீதிக்கான குரல் கொடுத்துக் கொண்டிருந்தபோது அக்குரல்களை வலுவிழக்கச் செய்து தென்னிலங்கை தலைமைகளுக்கு காப்புறுதி வழங்கி நீதிக் கோரிக்கையையும் பொறுப்புக் கூறலையும் திட்டமிட்டு நீர்த்துப் போகச் செய்வதற்கு காரணகர்த்தாவாக இருந்தவரே சுமந்திரன்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்றும், அரசியல் கைதிகளை பாரதூரக் குற்றசாட்டுக்களைச் செய்த புலிகள் என்றும் என எத்தனையோ விடயங்களில் சுமந்திரன் தம்முயிர்களை தியாகம் செய்த, செய்யத்துணிந்த மாபெரும் மறவர்களுக்கு நேரெதிரான சிந்தனைகொண்டவர் என்பதை பகிரங்கமாகவே வெளிப்படுத்தி வந்துள்ளார். இத்தகைய ஒருவர் தற்போது தமிழ்மக்கள் தமது உயிரிலும் மேலாக நினைக்கும் தேசியத் தலைவர் பிறந்த மண்ணில் நின்றுகொண்டு தேசியத் தலைவரின் பெயரை உச்சரித்து தனது தேர்தல் அரசியல் நாடகத்தினை அரங்கேற்றியிருப்பது அவரின் பச்சோந்தி முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தேர்தல் காலங்களில் மாவீர மறவர்களுக்கு மகுடம் சூட்டி அம்மறவர்களின் உறவுகளின் வாக்குகளை வகையின்றி பெற்று சுயலாப அரசியல் செய்வதே இவர்களின் திட்டம். அதற்காகவே தேசியத் தலைவரையும், மறவர்களையும், அவர்களின்புனித பயணத்தினையும் முன்னிலைப்படுத்துகின்றார்கள். தமிழீழத் தலைவர் சம்பந்தமான விடயத்தை கையாள்கின்ற எவரும் சத்தியத்தோடு நின்றே அதனை செய்தாக வேண்டும். தமிழீழத் தேசியத் தலைவர் சம்பந்தமான ஒரு நாடகத்தை அவர் பிறந்த மண்ணில் நின்று கொண்டே அரங்கேற்றுகின்ற துணிச்சலை சுமந்திரன் பெற்றிருப்பதும் ஆழ் கவனத்துக்குரியது. அந்த மண்ணும் மக்களும் தங்களைச் சுற்றி நடந்து கொண்டிருப்பவற்றை, இந்த மண்ணுக்காக கொடுக்கப்பட்ட உயிர்க் கொடைகளை தெளிவாகப் புரிந்து தீர்மானங்களை எடுப்பது காலத்தின் அவசியம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் வாக்குகளை இலக்கு வைத்து கோத்தபாய நகர்த்தும் காய்கள்

**பூமிகன்**



இலங்கை அரசியலில் பலம்வாய்ந்த அணியாக இனங்காணப்படும் பொதுஜன பெரமுனையின் சனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச களமிறங்குகின்றார். முன்னாள் பாதுகாப்புச் செயலாளராக — சிங்கள மக்களின் ஹீரோவாக அவர் இருந்தாலும், தேர்தலில் வெற்றிபெறுவதற்கு பிரதான சவாலாக இருக்கப்போவது சிறுபான்மையினருடைய வாக்குகளை அவரால் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதுதான். முழுக்க முழுக்க சிங்கள வாக்குகளை மட்டுமே நம்பி களமிறங்கினால் வெற்றிபெற முடியாமல் போய்விடலாம் என்ற அச்சம் அவரிடம் ஏற்பட்டிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. சிங்கள வாக்குகளைப் பாதிக்காமல், தமிழ் வாக்குகளை எப்படிக் கவர்வது என்பதுதான் இன்று அவர்களுக்குள்ள பிரச்சினை.

இதற்கான வியூகங்களை அமைப்பதில் மொட்டு அணியினர் அவசரமாக இறங்கியிருப்பதை கடந்த இரண்டு வார காலத்தில் காணமுடிந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, விக்கியுடன் இருக்கும் அணியினரோ, கஜன் தரப்போ தம்மை வெளிப்படையாக ஆதரிக்கப்போவதில்லை என்பது ராஜபக்சக்களுக்குத் தெரியும். அதனால்தான் அவசரம் அவசரமாக சிறிய பத்து அணிகளை அழைத்து அவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை அவர்கள் கடந்த வாரம் கைச்சாத்திட்டார்கள். 2005 சனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு லட்சம் வாக்குகளால்தான் மகிந்த வெற்றிபெற்றிருந்தார். அதனால், எந்த ஒரு சிறிய கட்சியையும் புறக்கணித்துவிட அவர்கள் இப்போது தயாராகவில்லை. "சிறு துரும்பும் பற்குத்த உதவலாம்" என அவர்கள் நம்புகின்றார்கள்.

இதன் அடுத்த கட்டமாக இரண்டாம் நிலையிலுள்ள கட்சிகள் கொழும்புக்கு அழைக்கப்பட்டன. கடந்த மூன்று வாரகாலமாக அவர்கள் கொழும்பில் முகாமிட்டு, மொட்டு அணியினருடன் இரவிரவாகப் பேசிவருகின்றார்கள். அதில் குறிப்பாக டக்ளஸ் தேவானந்தா, வரதராஜப் பெருமாள், பிரபா கணேசன், டாக்டர் விக்கினேஸ்வரன், உதயராஜா, அருண் தம்பிமுத்து போன்ற தமிழ்த் தரப்பினருடன் இடதுசாரிக் கட்சிகளும் அடக்கம். ஆறுமுகம் தொண்டமானின் அணியும் இவர்களுடனேயே நிற்கிறது. இவற்றைவிட, தீவிர இனவாதக் கட்சிகளாக அடையாளம் காணப்பட்ட விமல் வீரவன்ச தரப்பு, உதய கம்பன்பில தரப்புக்களும் இந்த முகாமில்தான் உள்ளன.

இதில் முக்கியமான தமிழ்த் தலைமைகள் தனித்தனியாக மகிந்தவை சந்தித்து நீண்ட பேச்சுக்களை நடத்தியிருக்கின்றனர். டக்ளஸ், வரதர் ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். இதன்போது அவர்கள் முக்கியமாகச் சுட்டிக்காட்டிய விஷயம், "கோத்தாவை தமிழ் மக்கள் முன்பாக சந்தைப் படுத்துவது கடினமானது" என்பதுதான். காரணம் கோத்தா ஏற்கனவே கடும்போக்கு சிங்கள அதிகாரியாக அடையாளம் காணப்பட்டவர். மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அவர் மீது குற்றச்சாட்டுக்களும் உள்ளன. அதனால், “இவர்தான் எமது சனாதிபதி வேட்பாளர்" என அறிமுகப்படுத்துவதில் தமக்குள்ள சிரமத்தை அவர்கள் மகிந்தவுக்கு விளக்கியிருக்கிறார்கள்.

பொதுஜன பெரமுன வட்டாரங்களில் கணிப்பின்படி, சிங்கள வாக்குகளில் பெருமளவைத் தம்மால் பெறமுடியும் என அவர்கள் நம்புகின்றார்கள். அதாவது, சிங்கள வாக்குகளில் 55 வீதத்துக்கும் அதிகமானதை தம்மால் பெறமுடியும் என அவர்கள் கணிப்பிடுகின்றார்கள். சஜித் களமிறங்கினால் போட்டி கடினமானதாக இருக்கும் என்ற ஒரு கருத்தும் மொட்டு வட்டாரங்களில் உள்ளது. அவ்வாறான நிலையில், தமிழ் வாக்குகள் அவசியம் என்பதை அவர்கள் உணர்கின்றார்கள். உண்மையில் தமிழ் மக்களின் உணர்வுகள் எப்படியுள்ளது? அவர்களுடைய குறைந்தபட்ச ஆதரவையாவது தக்கவைப்பதற்கு என்ன செய்யலாம்? என்பதுதான் அவர்களுக்குள்ள பிரச்சினை.



**இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்கள்**

அதற்காகத்தான் அவசரமாக சித்தார்த்தனையும், பின்னர் சுமந்திரனையும் கோத்தா அழைத்துப் பேசியிருக்கின்றார். தாம் சந்திக்கவில்லை என சுமந்திரன் பின்னர் சொன்னாலும், சந்திப்பு நடைபெற்றது உண்மை என கொழும்பிலுள்ள அரசியல் வட்டாரம் ஒன்று பின்னர் உறுதிப்படுத்தியது. இதன்போது, தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் பேசப்பட்டதாக சொல்லப்படுகின்றது. குறிப்பாக, அரசியல் தீர்வு விடயத்தில் கோத்தா எந்தவொரு வாக்குறுதியும் கொடுக்கமாட்டார் எனத் தெரிகின்றது. “செய்யக் கூடியவைகளையே நான் சொல்வேன். செய்ய முடியாத எதனையும் நான் வாக்குறுதியாகக் கொடுக்கமாட்டேன்" என அவர் இதன்போது உறுதியாகக் கூறியிருக்கின்றார்.

“நான் தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்ற விடயங்களையே பார்த்துக்கொள்வேன். அரசியலமைப்பு விவகாரங்களை அண்ணன் (மகிந்த) பார்த்தக்கொள்வார்" என்ற கருத்தை இந்த சந்திப்புக்களின் போது கோத்தா வெளியிட்டார். மகிந்த பிரதமராகப் பதவிக்கு வருவார் என்ற கருத்திலேயே தன்னுடைய நிலைப்பாட்டை கோத்தா வெளியிட்டார். “புதிய அரசியலமைப்பு தேவையானால் அதனை பாராளுமன்றம் தயாரிக்கலாம். அதில் நான் தலையிட மாட்டேன். அது பாராளுமன்றத்தின் பொறுப்பாக இருக்கும். இதில் பாராளுமன்றம் எடுக்கும் நிலைப்பாட்டை நான் ஏற்றுக்கொள்வேன்" என்பதுதான் தன்னுடைய அணுகுமுறை என கோத்தா விளக்கியதாகத் தெரியவந்திருக்கின்றது.

இதேவேளையில், தமிழ் மக்களைக் கவரக் கூடிய சில அறிவிப்புக்களை மகிந்த வெளியிடுவார் என மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாமல், வடக்கில் இடம்பெறும் பிரச்சாரக் கூட்டங்களிலேயே இந்த விபரங்களை அவர் அறிவிப்பார். தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படையில் சில விடயங்களை மகிந்த தரப்பு தயாரித்து வைத்திருப்பதாகத் தெரிகின்றது. “மகிந்தவுடன் பல விடயங்களையிட்டும் பேசியுள்ளோம். அதில் சில விடயங்களை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதற்றை நாம் சொல்வதை விட அவர்கள் சொல்வது பொருத்தமானதாக இருக்கும்" என இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்ட வரதராஜப் பெருமாள் கொழும்பில் ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்திருக்கிறார். “தேர்தலில் களமிறங்கும் இரண்டு வேட்பாளர்களில் ஒருவரை நாம் நேரடியக ஆதரிக்கப்போகின்றோமா? அல்லது மறைமுகமாக ஆதரிக்கப்போகின்றோமா? என்பதுதான் இன்றுள்ள கேள்வி" எனக் குறிப்பிடும் வரதர், “ஐ.தே.க. எதனையும் செய்யப்போவதில்லை. அதனால் அவர்களை நாம் ஆதரிக்க முடியாது" எனவும் குறிப்பிடுகின்றார். “இதனால் மற்றப் பக்கத்தைத்தான் ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் நாங்கள் இருக்கிறோம். அதன்மூலமாக தமிழ் மக்களுக்கு அதிகபட்ச எதனைப் பெற்றுக்கொடுக்க முடியுமோ அதற்காக முயற்சிக்கிறோம்" என தன்னுடைய நிலைப்பாட்டை வரதர் விளக்கியிருக்கிறார். வரதர் அணி கோத்தாவை ஆதரிக்கப்போகின்றது என்பது இப்போது பகிரங்கமாகியிருக்கின்றது.

"முன்னர் இருந்த சூழ்நிலை வேறு. இப்போது நிலை மாறிவிட்டது. மாகாண சபைகளை காத்திரமான முறையில் செயற்பட வைப்பேன்" என தம்மை ஆதரிக்கும் தமிழ்க் கட்சிகளிடம் மகிந்த கூறியிருப்பதாகத் தெரிகின்றது. அரசியல் கைதிகள் விவகாரத்திலும், விரைந்த நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் சொல்லியிருக்கின்றார். இது போன்ற பல விஷயங்களை மகிந்த தரப்பு பகிரங்கமாக வெளிப்படுத்தலாம். கடந்த கால அனுபவங்களும் மகிந்த தரப்பை வழிநடத்தலாம் என்பதும் வரதரின் கருத்தாக இருந்தது. இந்த வியூகங்களின் மூலம் தமிழ் வாக்குகளை எந்தளவுக்கு கோத்தா அறுவடை செய்கின்றார் என்பதிலேயே அவரது வெற்றி தங்கியிருக்கின்றது.

இதன் மறுபுறத்தில் கோத்தா தரப்பு மற்றொரு வியூகத்தையும் வகுக்கின்றது. தமிழ் வாக்குகளைப் பெறுவதன் மூலம், சர்வதேச அரங்கில் தம்மீது சுமத்தப்படும் போர்க் குற்றங்களின் சுமையைக் குறைத்துவிடமுடியுமா என்பதுதான் கோத்தாவின் திட்டம். தமிழ் மக்களே ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் என்னும்போது, குற்றச்சாட்டுக்கள் நீர்த்துப் போய்விடும் என அவர்கள் நம்புவதாகத் தெரிகின்றது. ஐ.தே.க.வை விட ராஜபக்ச தரப்புக்கு சர்வதேச அழுத்தங்கள் அதிகமாக இருக்கும் என்பது உண்மை. அதனையிட்டு அவர்கள் கரிசனையாக இருப்பதும் உண்மை. ஆனால், தமிழ் வாக்குகள் தமக்கு அதிகளவுக்குக் கிடைத்தால், அதனைச் சமாளிக்க முடியும் என கோத்தா தரப்பு நம்புகின்றது. அதனால், தமிழ் மக்கள் மிகவும் நிதானமாக தமது வாக்குச் சீட்டைப் பயன்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.

# தமிழீழத் தேசியத் தலைவரை புகழும் ராஜபக்ச!

பிரபாகரன் ஒரு நோக்கத்தை அடிப்படையாக கொண்டு போரிட்டார். பிரபாகரனிடம் ஒரு ஒழுக்கம் காணப்பட்டது. அதனை நான் பார்க்கின்றேன் அடிக்க வேண்டும்



என்றால் அடிப்பார் இல்லையென்றால் அடிக்காமல் விடுவார். ஒரு ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவரிடம் இருந்தது என்று தெரிவித்துள்ளார் இனப்படுகொலையாளர் ராஜபக்ச. கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு

தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வு என்று வரும் போது இந்தியாவின் காஷ்மீரில் நடந்த நிலைமையை கருத்தில் கொண்டே நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றை புரிந்து கொண்டே அரசியல் தீர்வு திட்டத்தை தேட வேண்டும்.ஆனால் 13 ஆவது திருத்தத்தை அடிப்படையாகக்கொண்டு இரண்டு வருடங்களில் அரசியல் தீர்வை காண்பேன்.அரசாங்கத்தை காப்பாற்றுவதை மட்டுமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு செய்கின்றது. வேறு எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை.

தீர்வையும் பெறவில்லை. அபிவிருத்தியையும் பெறவில்லை.கூட்டமைப்பு எவ்வித அர்த்தமும் இல்லாத பணியை செய்கின்றது. வடக்கு கிழக்கிற்கு வீதியை, பாடசாலையை, இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுக்கவில்லை.

எதையுமே மக்களுக்கு பெற்றுக்கொடுக்காமல் அரசாங்கத்தை ஆதரித்தனர். மாறாக அவர்கள் தமக்கு பலவற்றை பெற்றுக்கொண்டிருக்கின்றனர். தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன். இதற்கு எனக்கு இரண்டு வருடங்கள் தேவைப்படும்.அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை காண முடியும்.

அதற்கான சக்தியும் பலமும் எம்மிடம் இருப்பதாக நான் கருதுகிறேன். அரசியல் தீர்வுக்காக தமிழ் மக்களுடனேயே பேச்சுவார்த்தை நடத்துவேன். தமிழ் மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த எப்போதும் தயாராகவே இருக்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செஞ்சோலை நினைவுத் தூபியில் மாணவரின் ஒளிப்படங்கள் பதிக்க தடை



வள்ளிபுனம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் நினைவுத் தூபியில் அவர்களின் ஒளிப்படங்களை பதிப்பதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர். அத்தோடு, குறித்த பணிகளை முன்னெடுத்த சிலரை இன்று (ஞாயிற்றுக்கிழமை) புதுக்குடியிருப்பு காவல் நிலையத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில் இலங்கை விமானப்படை நடத்திய மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலில் 53 மாணவர்கள் உயிரிழந்திருந்தனர். அவர்களின் 13ஆவது ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 14ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்நிலையில் அவர்களை நினைவுகூறும் முகமாக வள்ளிபுனம் செஞ்சோலை செல்கின்ற வீதியில் பாரிய நினைவு தூபியொன்று அமைக்கப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உரிய அனுமதி பெறப்பட்டு குறித்த வீதியில் நினைவு தூபி அமைக்கப்பட்டபோதும், இந்த நினைவுத் தூபியில் மாணவர்களின் ஒளிப்படங்களை பதிப்பதற்கு காவல்துறையினர் தடை விதித்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த விடயம் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.


குறிப்பாக இலங்கையில் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு நினைவாலயங்கள் அமைப்பதற்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கமும் காவலர்களும் தடைவிதித்து வருகின்ற நிலையில் இந்த சம்பவம் அரங்கேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் பாரம்பரிய முறைப்படி நடந்த மஞ்சள் நீராட்டு விழா

யாழ்ப்பாணம் ஆனைக்கொடைப் பகுதியை சேர்ந்த வெளிநாட்டில் வதியும் நபர் ஒருவர் தனது மகளின் மஞ்சள் நீராட்டு விழாவினை தமிழர் பாரம்பரிய முறைப்படி கொண்டாடியுள்ளனர்.

இந்நிலையில் இந்நிகழ்வானது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது மீண்டும் பாரம்பரியத்தை நினைவுபடுத்தி இப்படி ஒரு நிகழ்வு இடம்பெற்றமையானது பலரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த மஞ்சள் நீராட்டு விழாவில் அனைவருக்கும் தேநீருக்குப் பதிலாக இள நீர் கொடுக்கப்பட்டதோடு உணவுகளும் மட்பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பனை ஓலைகளினால் மாத்திரமே இந்த அலங்காரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களினால் இந்த அலங்காரங்கள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.











# மொஸ்கோவில் வெடித்த போராட்டத்தில் 50 ஆயிரம் பேர் பங்கேற்பு



மொஸ்கோவில் தேர்தலை நியாயமாக நடத்தக் கோரி போராட்டத்தில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை 50,000 பேராக அதிகரித்துள்ளது. ரஷ்யாவின் மாஸ்கோ நகர உள்ளாட்சி உறுப்பினர்களுக்கான தேர்தல் வரும் செப்டம்பர் மாதம் 8ஆம் திகதி நடைபெற உள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு முக்கிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் தாக்கல் செய்த வேட்புமனுக்களில் குளறுபடிகள் இருப்பதாகக் கூறி, அவர்களுக்கு தேர்தல் அதிகாரிகள் தடை விதித்தனர். இந்த முடிவை திரும்ப பெற கோரியும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை தேர்தலில் போட்டியிட அனுமதிக்க கோரியும் கடந்த 21ஆம் திகதி சுமார் 22,000 பேர் வீதிகளில் இறங்கி கோரிக்கை விடுத்தனர்.

இதில், எதிர்க் கட்சியினர் உட்பட, போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் 1,400 பேரை காவல்துறை—யினர் கைது செய்தனர். இது 2011—2012 பிறகு ரஷ்யாவில் நடந்த மிகப்பெரிய ஆர்ப்பாட்டமாகும். குடிமக்கள் மற்றும் பிரபலங்களின் ஆதரவு நாடு முழுவதும் வளர்ந்து வருவதால், புரோஸ்பெக்ட் சாகரோவில் நடக்கும் அங்கீகரிக்கப்பட்ட போராட்டத்தில் இதுவரை குறைந்தது 50,000 பேர் கூடியிருப்பதாக தன்னார்வ தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும், மாஸ்கோ நகர அரசு இசை நிகழ்ச்சிகளை தடைசெய்தும், இந்த பேரணியில் பிரபலமான பாடகர்களின் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சனிக்கிழமையன்று நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு முன்னதாக, முகமூடி அணிந்த காவல்துறையினர், எதிர்க்கட்சி ஆர்வலர் லியுபோவ் சோபோலின் அலுவலகத்திற்கு சென்று அவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றதாக சோபோல் தனது டுவிட்டரில் பக்கத்தில் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியதாவது: "என்னால் போராட்டதிற்கு வர இயலாது. ஆனால் நான் இல்லாமல் என்ன செய்ய வேண்டும் என்று உங்களுக்கு தெரியும், "ரஷ்யா சுதந்திரமாக இருக்கும்!" என கூறினார் சோபோல். இதுவரை மாஸ்கோ ஆர்ப்பாட்டத்தில் 8 பேர் கைது செய்யபட்டுள்ளதாக காவல் கண்காணிப்பு வலைத்தளம் தெரிவித்துள்ளது.

# விமான நிலையத்தைக் கைப்பற்றிய ஹொங்கொங் போராட்டக்காரர்கள்

சர்வதேச கவனத்தை ஈர்ப்பதற்காக ஹொங்கொங் போராட்டக்காரர்கள் விமான நிலையத்தில் திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்கள் அங்கு 3 நாட்கள் தங்கியிருந்து போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

ஹாங்காங்கில் கிரிமினல் வழக்குகளில் சிக்குகிறவர்களை சீனாவுக்கு நாடு கடத்தி, வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஜூன் மாத தொடக்கத்தில் சனநாயக ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித்தனர். லட்சக்கணக்கானோர் ஒன்று திரண்டு நடத்திய போராட்டத்தால் ஹொங்கொங் குலுங்கியது.

இதையடுத்து, கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்த மசோதா நிறுத்திவைக்கப்படுவதாக ஹொங்கொங் நிர்வாகம் அறிவித்தது. ஆனாலும் போராட்டக்காரர்கள் சமரசம் ஆகவில்லை. மசோதாவை முழுமையாக திரும்பப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி அவர்கள் போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

கைதிகள் பரிமாற்ற சட்ட திருத்த மசோதாவை கைவிடுவது மட்டும் அல்லாமல், குற்ற வழக்குகளில் சிக்குபவர்களுக்கு வெளிப்படையான விசாரணை, கலவர குற்றச்சாட்டுக்கு ஆளான சனநாயக ஆதரவாளர்களுக்கு பொது மன்னிப்பு மற்றும் ஹாங்காங்கின் தலைவர் கேரி லாம் ராஜினாமா என போராட்டக்காரர்கள் தங்களின் கோரிக்கைகளை விரிவுபடுத்தி உள்ளனர். இதனால் போராட்டத்துக்கு ஆதரவு பெருகி வருகிறது. பொது மக்களுடன் அரசு ஊழியர்கள், வக்கீல்கள், விமானிகள், பஸ் டிரைவர்கள் என அனைத்து தரப்பினரும் போராட்டத்தில் கைகோர்த்து உள்ளனர். கடந்த திங்கட்கிழமை நடந்த பொது வேலை நிறுத்த போராட்டத்தால் ஹாங்காங்கின் இயல்பு வாழ்க்கையை முடக்கி ஸ்தம்பிக்க வைத்தது. இதையடுத்து, ஹொங்கொங் போராட்டக்காரர்கள் நெருப்புடன் விளையாட வேண்டாம் என்றும் மத்திய அரசாங்கத்தின் வலிமையை குறைத்து மதிப்பிடக்கூடாது என்றும் சீனா பகிரங்க எச்சரிக்கை விடுத்தது.



இந்த நிலையில், ஹொங்கொங் போராட்டம் குறித்து சர்வதேச பார்வையாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக போராட்டக் காரர்கள் ஹொங்கொங் சர்வதேச விமான நிலையத்தில் ஒன்று திரண்டு அமைதி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். நேற்று காலை கருப்பு உடைகளை அணிந்து கைகளில் பதாகைகளுடன் பேரணியாக சென்ற ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் விமான நிலையத்தின் வருகை மண்டபத்தில் குவிந்தனர். போராட்டக்காரர்கள் 3 நாட்களுக்கு விமான நிலையத்தில் தங்கியிருந்து போராட்டத்தை தொடர முடிவு செய்துள்ளனர். அவர்கள் நிர்வாக தலைவர் கேரி லாம் மற்றும் காவல் துறையினரைக் கண்டித்து வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்ட பதாகைகளை ஆங்காங்கே நிறுவி உள்ளனர். மேலும் சமீபத்திய போராட்டங்களை விளக்கும் கலைப் படைப்புகளுடன் துண்டு பிரசுரங்களை வழங்குகிறார்கள். சனநாயக ஆதரவாளர்களின் இந்த அமைதியான போராட்டம் இதுவரை பயணிகளுக்கு அதிக இடையூறு விளைவிக்க வில்லை என்பதால் விமான நிலைய அதிகாரிகள் இந்த போராட்டத்தை சகித்துக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் விமான நிலையத்தில் இதுவரை காவல்துறையினர் குவிக்கப்படவில்லை.

# காஷ்மீர் விவகாரத்தில் தலையிட பாகிஸ்தான் கோரிக்கை: ஐ.நா. நிராகரிப்பு

ஜம்மு காஷ்மீர் விவகாரத்தில் தலையிட பாகிஸ்தான் விடுத்த கோரிக்கையை ஐநா. நிராகரித்துள்ளது. அமெரிக்கா, சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளும் இப்பிரச்சினையில் தலையிட மறுத்துவிட்டன. இது பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய பின்னடைவு எனக் கருதப்படுகிறது. இந்தியா—பாகிஸ்தான் இடையிலான காஷ்மீர் பிரச்சினையில், 1974 ஆம் ஆண்டில் ஐநா. ஒரு தீர்வை வழங்கியது. அதன்படி, இருநாடுகளும் அமைதியான சமரச முயற்சிகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று சிம்லா ஒப்பந்தம் போடப்பட்டது.

சிம்லா ஒப்பந்தத்தை இந்தியா தனது கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரில் மீறி—விட்டதாக முறைப்பாடு தெரிவித்து பாகிஸ்தான் ஜம்மு காஷ்மீர் விவகாரத்தை எழுப்ப முயற்சித்தது. ஆனால் ஆக்கிரமிப்பு காஷ்மீரையும் சேர்த்துதான் ஐநா.சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது. பாகிஸ்தானால் ஆக்கிரமிக்கப்பட்ட காஷ்மீரில் இருந்து இந்தியாவுக்கு எதிராக தீவிரவாதம் ஏவப்படுவதையும் அதற்கு பாகிஸ்தான் அரசும் இராணுவமும் உடந்தையாக இருப்பதாகவும் இந்தியா சர்வதேச அளவில் அம்பலப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக ஜம்மு காஷ்மீரை யூனியன் பிரதேசங்களாக பிரிக்கவும் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யவும் இந்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டும் என்று ஐநா.பாதுகாப்பு கவுன்சிலுக்கு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குரேடு எழுதிய கடிதத்தை ஐநா பாதுகாப்பு கவுன்சில் நிராகரித்துவிட்டது. பாகிஸ்தானின் கடிதத்தை ஏற்க முடியாது என்றும் அதன் எந்தவிதக் கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியாது என்று ஐநா.பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் மாரியா ஃபெர்னாண்டா எஸ்பினோசா காரசஸ் தெரிவித்துள்ளார்.

1954ம் ஆண்டு இந்திய அரசியல் சாசனத்தின் படி 370 சிறப்பு அந்தஸ்து காஷ்மீருக்கு வழங்கப்பட்டதாகவும், 2019ம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட ஐநா.பாதுகாப்பு கவுன்சில் தீர்மானத்தில் அது அடங்காது என்றும் இந்தியா சுட்டிக் காட்டியுள்ளது. இதே போல் ஜம்மு காஷ்மீர் பிரச்சினையில் சர்வதேச நாடுகளின் தலையீட்டைக் கோரிய பாகிஸ்தானின் கோரிக்கையை அமெரிக்காவும் சீனாவும் நிராகரித்துவிட்டன. அமெரிக்கா செய்தித் தொடர்பாளர் ஒருவர் காஷ்மீர் பிரச்சினையில் இருதரப்பினரும் பேச்சு மூலம் தீர்வு காண வேண்டும் என்றும் இதில் அமெரிக்கா தலை—யிடாது என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். இதே போன்று பாகிஸ்தானின் நட்பு நாடான சீனாவும் இந்தியாவும் பாகிஸ்தானும் சமமான அளவு நட்பு கொண்ட அண்டை நாடுகள் என்று தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினையை இருநாடுகளையும் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுமாறு சீன வெளியுறவு அமைச்சரை சந்தித்துப் பேசிய குரேடுக்கு சீன அரசு அறிவுறுத்தியுள்ளது.

# பெண்களை நிலாவுக்கு அனுப்பும் நாசா



மீண்டும் நிலாவுக்கு மனிதர்களை அனுப்பும் பந்தயம் துவங்கிவிட்டது. அமெரிக்காவிலுள்ள தனியார் விண்வெளி அமைப்புகளான, 'ஸ்பேஸ் எக்ஸ், புளூ ஆரிஜின்' போன்றவை, புதிய ராக்கெட்டுகளையும், மனிதர்களை தாங்கிச் செல்லும் விண்கலன்களையும் அடுத்த சில ஆண்டுகளில் ஏவத் தயாராகி வருகின்றன. இந்நிலையில், அமெரிக்க விண்வெளி அமைப்பான, நாசா, 2024ல் நிலாவுக்கு மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. இந்த முறை போய் காலடி பதித்துவிட்டு வராமல், அங்கேயே தங்கி ஆராயவும் திட்டமிட்டுள்ளது. இதற்கு, 8 பில்லியன் டொலர்கள் தேவை என, அரசிடம் கேட்டுள்ளது நாசா. இதற்கு முன்பு நாசா, தன் அப்பல்லோ வரிசை விண்கலன்கள் மூலம், மனிதர்களை நிலாவில் கால் பதிக்க வைத்தது. இந்த முறை, கிரேக்க தொன்மத்தின்படி, அப்பல்லோவின் சகோதரியான, 'ஆர்டிமிஸ்' பெயரை, நிலா திட்டத்திற்கு சூட்டியிருக்கிறது.

ஏனெனில், இந்த முறை விண்வெளி வீராங்கனையரும் நிலாவுக்கு போய் தங்கி, ஆராய்ச்சிகள் மேற்கொள்ள இருக்கின்றனர். அமெரிக்க அதிபர் டிரம்ப், இதற்கென முதற்கட்ட நிதியையும் ஒதுக்கி, மீண்டும் அமெரிக்கர்கள் நிலாவுக்குப் போகப் போகின்றனர் என, 'டுவிட்டரில்' அறிவித்திருக்கிறார்.

# தும்பியின் மூளைக்கு இராணுவ அங்கீகாரம்



மிகச்சிறிய அளவாக இருந்தாலும், அந்த அளவு மூளையை வைத்து, எவ்வளவு விரைவாக இப்படியும் அப்படியும் பறக்கிறது தும்பி! அந்த மூளைக்குள் நியூரான் செல்கள் இயங்கி, எப்படி முடிவெடுக்கின்றன என்பதை விஞ்ஞானிகள் ஆராய்ந்திருக்கின்றனர்.

எதற்கு? கணினியில் அதே போன்ற அல்காரிதம் என்ற நிரல்களை எழுதி, அவை பாய்ந்து வரும் ஏவுகணைகளை, வானிலேயே தடுத்து தாக்கும் எதிர்ப்பு ஏவுகணைகளை திறம்பட இயக்க உதவுமா என்பதை விஞ்ஞானிகள் சோதித்து வருகின்றனர். பூச்சி—யினங்களில், 32.5 கோடி ஆண்டுகளைக் கடந்தும் அதிக பரிணாம மாற்றங்களை அடையாத தும்பி, இரைகளைக் குறிவைப்பதில், 95 சதவீத வெற்றி காணக்கூடியது.

எனவே, அதன் மூளையின் அடிப்படையில் நிரல் எழுதி, அதை எதிர் ஏவுகணைக்கு தந்தால் அதன் துல்லியம் பல மடங்கு கூடும் என்கின்றனர், அமெரிக்காவிலுள்ள சாண்டியா தேசிய ஆய்வகத்தின் விஞ்ஞானிகள். இந்த ஆராய்ச்சி ராணுவத்திற்கு மட்டுமல்ல, தானோட்டி வாகனங்கள், புதிய மருந்துகள் கண்டுபிடித்தல், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் வேகமாக முடிவெடுக்க, இந்த நிரல்கள் பயன்படும்.

# குழந்தை வளர்ப்பில் மகிழ்ச்சியாக இருப்பது அப்பாவா? அம்மாவா?

குழந்தை வளர்ப்பின் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சியை நோக்கி நாம் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அப்பாக்கள் பார்வையாளர்களாக மட்டுமல்லாமல், குழந்தை வளர்ப்பில் பங்கு பெறுபவர்களாகவும் இருந்தால் அம்மாக்களின் பளுகுறையும்"குழந்தைகளுடன் இருக்கும் போது அம்மாக்களைவிட அப்பாக்கள் ஆனந்தமாக இருக்கிறார்கள். கலிபோர்னியா பல்கலைக்கழத்தின் அண்மைய ஆராய்ச்சி இதைச் சொல்லியிருக்கிறது. அப்பா என்றாலே கண்டிப்பு, தண்டிப்பு என்றிருந்த காலம் தற்போது இல்லைத்தான். பெருவாரியான வீடுகளில் ஒரு குழந்தைதான் என்பதால், அப்பாக்களின் பங்கு இன்றைக்கு கண்டிப்பில் இருந்து நட்பாக மாறிவிட்டது. சரி, அந்த ஆராய்ச்சியின் முழு விபரம் என்ன, அம்மாக்களைவிட அப்பாக்கள் அதிகம் ஆனந்தப்படுவதன் பின்னணி என்ன என்று ஆய்வாளர்; ஒருவருரிடம் கேட்கப்பட்டது.

“அந்த ஆராய்ச்சியை மூன்று கட்டமாகப் பிரித்துச் செய்திருக்கிறார்கள். முதல் பிரிவில் குழந்தை இருக்கிற அப்பாக்கள், குழந்தை—யில்லாத அப்பாக்கள் என்று இரு பிரிவினரிடம் ஆராய்ச்சி செய்ததில், குழந்தை இருக்கிற அப்பாக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டாம் பிரிவில் மனஅழுத்தம் அதிகமான, படபடப்பான, பிரச்சினைகள் அதிகம் கொண்ட அப்பாக்கள் குழந்தைகளுடன் இருக்கும்போது, அவற்றையெல்லாம் மறந்து ஆனந்தமாக இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மூன்றாவதில், குழந்தைகளுடனான தங்கள் பொறுப்பு அதிகமாக அதிகமாக, அப்பாக்களின் சந்தோசமும் அதிகமாகிறது என்கிறது அந்த ஆராய்ச்சி” என்றவர், நம் ஊரைப் பொறுத்தவரை பணம் செலவழித்து ஆராய்ச்சி செய்தெல்லாம், அம்மாக்களைவிட அப்பாக்கள் குழந்தை வளர்ப்பில் ஆனந்தமாக இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க வேண்டிய அவசியமே இல்லை என்கிறார். அதற்கான காரணத்தையும் அவரே விளக்கினார். நம் நாட்டைப் பொறுத்தவரை, அந்தக் காலத்து அம்மாக்கள் வீட்டைப் பார்த்துக் கொள்வதையும் குழந்தை வளர்ப்பையுமே முக்கியமான பணியாகச் செய்துவந்தார்கள். அப்பாக்கள் வேலைக்குப் போய் வந்து பொருளாதாரத் தேவைகளைப் பார்த்துக்கொண்டார்கள். இந்தக் கால அம்மாக்கள், வீட்டு வேலை, அலுவலக வேலை என இரட்டைப் பளுவை சுமந்து கொண்டிருக்கிறார்கள். வேலைக்குப்போகிற காரணத்தால், வீட்டு வேலைகளை ஆண்கள் செய்ய வேண்டாம் என்ற நியாயம், ஏனோ பெண்களுக்கு இன்றுவரை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில், குழந்தைகளுடன் அம்மாக்கள் இணைந்து செய்கிற வேலைகளைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். காலையில் அவர்களை எழுப்புவது, குறிப்பிட்ட நேரத்துக்குள் பள்ளிக்கு தயார்ப்படுத்துவது, சாப்பாடு ஊட்டுவது, பிள்ளைகளின் வீட்டுவேலை சொல்லித் தருவது போன்ற பணிகளை எல்லாம் அம்மாக்கள்தான் செய்கிறார்கள். குழந்தைகளை வெளியே அழைத்துச் செல்வது, கேட்கின்ற விளையாட்டுச் சாமான்களை வாங்கித் தருவது, விதவிதமாக சாப்பிட வாங்கித் தருவது, உடன் விளையாடுவது என்று குழந்தைகளுக்கு விருப்பமானவை எல்லாம் அப்பாக்களின் கைவசம் இருக்கின்றன. விதி—விலக்குகளும் இருக்கலாம். இப்படியிருக்கும்போது, அந்த ஆராய்ச்சியை நம் நாட்டில் செய்தாலும் தற்சமயம் அம்மாக்களைவிட அப்பாக்கள்தான் குழந்தை வளர்ப்பில் சந்தோசமாக இருப்பார்கள் என்பதுதான் தனிப்பட்ட கருத்து. ஏனென்றால், நம் ஊரில் பெண்களுக்குத் தான் குழந்தை வளர்ப்பில் அதிக கஷ்டம் இருக்கிறது என்பது கண்கூடான ஒன்று. ஆனாலும், சிலரைத் தவிர பெரும்பான்மையான ஆண்கள் இதைக் கண்டு கொள்வதுமில்லை, உதவி செய்வதுமில்லை. குழந்தை வளர்ப்பின் அடுத்தகட்ட பரிணாம வளர்ச்சியை நோக்கி நாம் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

அப்பாக்கள் பார்வையாளர்களாக மட்டுமல்லாமல், குழந்தை வளர்ப்பில் பங்கு பெறுபவர்களாகவும் இருந்தால், அம்மாக்களின் பளுகுறையும். அப்போது, அப்பாக்களைப் போலவே அம்மாக்களும் குழந்தை வளர்ப்பில் ஆனந்தமாகவே இருப்பார்கள்.

